உள்நாட்டில் மக்கள் இடம்பெயர்தல் தொடர்பான விடயங்களை அணுகுதல்:

# தேசிய பொறுப்புடமைக்கான சட்டகம்



ஏப்ரல் 2005

UNIVERSITÄT BERN

புறூக்கிங்ஸ் நிறுவனம்- பேர்ண் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டில் இடம்பெயர்தல் தொடர்பான செயற்திட்டம்.

அட்டடைப்படம்: கிழக்குத் திமோரில் மீளத் திரும்பும் இடம்பெயர்ந்தவர்
புகைப்படம்: மனாடுட்டோ/UNHCR

# அணிந்துரை

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி, வோல்ற்றர் கொலின் வழங்கியது.**

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், தம்முடைய சொந்த நாட்டின் எல்லைகளுக்குள்ளே வதிவதனாலும், தம்முடைய அரசாங்கத்தின் நீதிநிர்வாகத்துக்கு உட்பட்டிருப்பதாலும், அவர்களின் பாதுகாப்பையும் தேவையையும் பூர்த்தி செய்ய உத்தரவாதம் வழங்கவேண்டிய தலையாய கடமை, அவர்கள் நாட்டு அதிகாரத்தையே சாரும். *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள் (பின்னிணைப்பைப் பார்க்கவும்)* இந்த விடயத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த மக்கள் தொடர்பாக உ.நா இடம்பெயர்ந்தோரின் உரிமைகளையும் அரசாங்கங்களின் கடப்பாடுகளையும் இவை வகுத்துள்ளன. தேசிய பொறுப்புடமை என்பது எவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சட்டகத்தை இது வழங்குகின்றது.

வினைத்திறன்மிக்க தேசிய விளைவு காட்டல் ஒன்றை உருவாக்குவதிலும், உள்நாட்டு இடப்பெயர்வில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை அணுகுவதிலும் சில வழிகாட்டல்களை இந்தக் கோட்பாடுகள் வழங்கவேண்டும். இந்த செயற்பாடு தொடர்பில் அரசாங்கத்திற்கு உதவி வழங்குவதற்காக, பேர்ண் பல்கலைக்கழகத்தின் புறூக்கிங்ஸ் நிறுவனத்தின் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான செயற்திட்டத்தின் உதவி இயக்குனர் எரின் மூனி, தேசிய பொறுப்புடமையின் தரநியமங்களை தொகுத்து வழங்கியுள்ளார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பில் தம்முடைய கடப்பாடுகளை நிறைவேற்றும் அரசாங்கம், கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான விடயங்களை ஒவ்வொரு தரநியமங்களும், குறித்து நிற்கின்றன.

அரசாங்கங்கள் தம்முடைய நாட்டு நிலைமைக்கு ஏற்றவகையில், தாம் எடுக்கும் படிமுறைகளை மாற்றியமைக்கவேண்டிய தேவையுள்ளது. உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய முன்னெடுப்புகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவை அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதென நிரூபிக்கப்பட வேண்டும். குறிப்பாக, அரசாங்கங்கள் இடப்பெயர்வைத் தடுக்க அல்லது குறைக்க முன்வரவேண்டும், தேசிய மட்டத்தில் இவ்விடயம் பற்றிய வழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உ.நா.இடம்பெயர்ந்தோர் பற்றிய தரவுகளையும் எண்ணிக்கைகளையும் சேகரிக்க வேண்டும், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பயிற்சிகளையும், வழிகாட்டற் குறிப்புகளையும் வழங்க வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக தேசிய சட்ட சட்டகம் ஒன்றை உருவாக்க வேண்டும். உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும், தீர்மானம் மேற்கொள்ளலில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் பங்களிப்பையும் உறுதிசெய்வதுடன், உள்நாட்டில் இடப்பெயர்ந்தோருக்கு நீண்ட நிலையான தீர்வை வழங்க முன்வரவேண்டும். இதற்கு மேலதிகமாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு தேசிய ஆற்றல் போதாமலிருக்கும் பட்சத்தில், சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன், இதனைத் தீர்க்க முன்வருதல் தேசியக் கொள்கையில் முக்கிய அங்கம் வகிக்க வேண்டும்.

தேசிய பொறுப்புடமை சட்டகமானது, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க முன்வரும் அரசாங்கங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. மேலும் இது, சர்வதேச நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள், தேசிய மனித உரிமை நிறுவகங்கள், சிவில் சமூகங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோர், தேசிய பொறுப்புடமை எவ்வளவு தூரம் வினைத்திறன் மிக்கதாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதையும், உள்நாட்டில் இடப்பெயர்ந்தோரின் உரிமைகள் எந்தளவு தூரம் பரிந்துரைத்தல் முயற்சிகளில் அடிப்படையாகப் பின்பற்றப்படுகிறது என்பதையும் கணிப்படலாம்.

இந்த வெளியீட்டில் உள்ளடங்கும் படிமுறைகளைக் கவனமாக மீளாய்வு செய்து, அதில் பொருத்தமான வழிகாட்டிகளைத் தெரிந்தெடுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகளை செயற்திறன் மிக்க முறையில் கையாளுவதற்கு அரசாங்கங்கள் பயன்படுத்தும் என்பது இந்த உரையை முன்வைக்கும் பிரதிநிதியின் நம்பிக்கை. நிதிக்கொடை வழங்கும் அரசாங்கங்களும், இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதற்காக அரசாங்கங்களுக்கு நிதியுதவி வழங்கும்போது தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு தேசிய பொறுப்புடமையின் தரநியமங்களைக் கவனமாக மீளாய்வு செய்கின்றன.

# பொருளடக்கம்


அறிமுகம் / 5

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள் / 7

தேசிய விளைவுகாட்டலுக்கான அடிப்படைக் குணாம்சங்கள் / 9

தேசிய பொறுப்புடமையின் எல்லைக் கோடுகள் / 12

1. தடுப்பு / 12
2. பிரச்சினை பற்றிய தேசிய விழிப்புணர்வை உருவாக்கல் / 13
3. தரவு சேகரிப்பு / 14
4. உ.நா.இ. உரிமைகள் தொடர்பான பயிற்சி வழங்கல். / 15
5. உ.நா.இ. உரிமைகளைப் சிறப்பாகப் பேணுவதற்கான சட்ட சட்டகம் / 17
6. உ.நா.இடப்பெயர்வு தொடர்பான தேசிய திட்டம் அல்லது தேசிய கொள்கை / 18
7. உ.நா.இடம்பெயர்ந்தோருக்கான தேசிய நிறுவகத்தின் முக்கிய கண்ணோட்டம் / 19
8. தேசிய மனித உரிமைகள் நிலையத்துக்கான பங்களிப்பு / 20
9. தீர்மானம் மேற்கொள்ளலில் உ.நா.இ. பங்களிப்பு / 22
10. நீடிக்கும் தீர்வுகள் / 24
11. போதுமான வழங்கல் / 26
12. சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு / 26

முடிவுரை / 30

முடிவுக்குறிப்புகள் / 31

பின்னிணைப்பு: உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள் / 32

# அறிமுகம்

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தம்முடைய நாட்டுக்குள்ளே வதிவதனால், சர்வதேசச் சட்டங்களின் நியமங்களின் பிரகாரம், தம்முடைய சொந்த அரசாங்கங்களின் பாதுகாப்பையும், உதவியையும் அனுபவிக்கும் உரிமையை அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பது மிகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அடிக்கடி வலியுறுத்தப்பட்டுவரும் உண்மையாக விளங்குகின்றது. உண்மையில், தம்முடைய நாட்டில் வதியும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பையும் நலனையும் பேணவேண்டிய தலையாய பொறுப்பு தமக்குண்டு என்பதை அரசாங்கங்களும் எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு பாதுகாப்பையும், உதவியையும் உறுதிசெய்யும் மிகமுக்கிய பொறுப்பு, முதலில் அவர்களின் நாட்டு அதிகாரத்தை சாருகின்றது என *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் குறிப்புகள்* தெரிவிக்கின்றன. (பின்னிணைப்பைப் பார்க்கவும்) இது, உ.நா.இ. உரிமைகளையும், அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாடுகளையும் வலியுறுத்துவதுடன், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான, சர்வதேச, பிராந்திய அணுகுமுறைகளுக்கு வழிகாட்டும் மையக் கருத்தாகவும் விளங்குகின்றது.

ஆனால் உ.நா.இ.தொடர்பான தேசிய பொறுப்புடமை என்பது ஆணித்தரமாக எவ்வாறான அர்த்தத்தைக் கொண்டுள்ளது? இதனை எவ்வாறு அளவிடலாம்? மேம்படுத்தலாம்? மீளஅமுல்படுத்தலாம்? ஆதரவளிக்கலாம்?

உ.நா.இ.தொடர்பான தேசிய பொறுப்புடமை என்பதை எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டுமானால், நாம் முதலில் தீர்வு காணவேண்டிய கேள்விகள் இவையாகும். தேவையான குறிகாட்டிகள் அல்லது தரநிர்ணயங்கள் ஆகியவை இந்த பொறுப்புடமையிலிருந்து அரசாங்கத்திற்கு வலக்களிப்பதற்கான ஒழு வழிகாட்டியை வழங்குவதற்கும், அது செயற்திறன் மிக்க முறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்கான ஒரு தளமாகவும் தேவைப்படுகின்றன. இந்த வகையில், உள்நாட்டு இடப்பெயர்வை அணுகுவதற்கு வேண்டிய சில தர நிர்ணயங்களைக் கொண்டதாக இந்த *தேசிய பொறுப்புடமைக்கான சட்டகம்* தயாரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய பொறுப்புடமையை செம்மையாக நிறைவேற்றுவதற்கு குறிப்பாக, 12 முக்கிய படிமுறைகள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**1.) இடப்பெயர்வைத் தடுத்தலும், இதன் பாதகமான தாக்கங்களைக் குறைத்தலும்**

**2.) பிரச்சினை பற்றிய தேசிய விழிப்புணர்வை உருவாக்கல்**

**3.) உ.நா.இ. நிலமைகள் தொடர்பாகவும், எண்ணிக்கை தொடர்பாகவும், தரவு சேகரித்தல்.**

**4.) உ.நா.இ. உரிமைகள் தொடர்பான பயிற்சி வழங்குவதற்கு ஆதரவளித்தல்**

**5.) உ.நா.இ. உரிமைகளை சிறப்பாகப் பேணுவதற்கான சட்ட சட்டகம் ஒன்றை உருவாக்கல்**

6.) **உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை வகுத்தல்**

7.) **உ.நா.இ விடயத்துக்கு நிறுவனமயப்பட்ட முக்கிய கண்ணோட்டம் ஒன்றை வழங்கல்**

8.) **உள்நாட்டு இடப்பெயர்வையும் தம்முடைய செயற்பாடுகளில் ஒன்றாக இணைத்து முன்னெடுப்பதற்கு தேசிய மனித உரிமை நிறுவனங்களுக்கு ஊக்கம் அளித்தல்.**

9.) **தீர்மானம் மேற்கொள்ளலில் உ.நா.இ. பங்களிப்பை உறுதிசெய்தல்**

10.) **நீடிக்கும் தீர்வுகளுக்கு ஆதரவு வழங்கல்**

11.) **பிரச்சினைக்குப் போதுமான வளங்கள் ஒதுக்குதல்**

12.) **தேசிய ஆற்றல் போதுமானதாய் இல்லாத போது, சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைத்தல்.**

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து, இந்த எல்லைக் கோடுகள், உள்நாட்டு இடப்பெயர்வு நிலைமைகள் தொடர்பான தேசிய பொறுப்புடமையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு சட்டகத்தைக் கொண்டுள்ளன.

இந்த *தேசிய பொறுப்புடமைக்கான சட்டகத்தின்* நோக்கமானது, தம்முடைய நாட்டில் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களை அணுகுவதற்கும் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வேண்டிய வழிகாட்டல்களை அரசாங்கங்களுக்கு வழங்குவதாகும். இதன்படி, இதன் முதன்மை இலக்கு உள்நாட்டு இடப்பெயர்வு நிலைமைகளில் அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டிய பிரதான படிமுறைகளை இனங்காண்பதாகும். அதேநேரத்தில், தேசிய மனித உரிமைகள் நிறுவனம், பிராந்திய அமைப்புகள், உதவி வழங்கும் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் போன்ற ஏனைய செயற்பாட்டாளர்களின் முக்கிய பங்களிப்பையும் சிலவேளைகளில் அவற்றின் பொறுப்புகளையும் இந்த சட்டகம் கொண்டுள்ளது. இதன்படி இந்தச் *சட்டகமானது*, சர்வதேச நிறுவனங்கள், முகவரமைப்புகள், நிதிக்கொடை நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள், தேசிய மனித உரிமை நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன், உ.நா.இடம்பெயர்ந்தவர்களுக்கும், தேசிய பொறுப்புடமை எந்தளவு சிறப்பாக நிறைவேற்றப்படுகிறது என்பதைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் வேண்டிய கருவியாகப் பயன்படுவதுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்குத் தேவையான பரிந்துரைத்தல் முயற்சிகளுக்கான அடிப்படையையும் வழங்குகின்றது.

# உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான
## அடிப்படை வழிகாட்டற் குறிப்புகள்.

உ.நா.இ. க்கு உதவிகள் வழங்குவதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்குமான முக்கிய பொறுப்பு, அவர்களது நாட்டு அதிகாரத்தையே சாருகின்றது. உ.நா.இ. இன் உரிமைகளையும் அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாடுகளையும் குறித்து நிற்கும் *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான அடிப்படை வழிகாட்டற் கோட்பாடுகள்* முழுவதிலும் இது, கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அரசாங்கங்களின் கோரிக்கைகளின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த ஆவணமானது, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினதும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் தீர்மானங்களில் வெளிப்படுத்தப்பட்டனவற்றை 30 கோட்பாடுகளில் விளக்கும் இந்த ஆவணம், தேசிய பொறுப்புடமை என்பது எவற்றைக் கொண்டிருக்கவேண்டும் எனத் தெளிவுபடுத்தும் ஒரு சட்டகத்தைக் கொண்டமைந்துள்ளது. உண்மையில் இந்தக் *கோட்பாடுகள்* உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களை அணுகுவதற்கான கருவியாகவும், நியமமாகவும் உலகளாவிய ரீதியில் அரசாங்கங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இதனைப் பயன்படுத்துவதற்கும் இது பற்றிய கருத்துக்களைப் பரப்புவதற்கும் அரசாங்கங்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன.[1]

*வழிகாட்டற் கோட்பாடுகளை* மேம்படுத்துவதும் பரப்புவதும் உ.நா.இ.இன் உரிமைகளையும் விசேட தேவைகளையும் அங்கீகரிப்பதற்கான ஒரு விசேட வழிமுறையாகவும், இம்மக்கள் தொடர்பான அரசாங்கங்களின் கடப்பாடுகளை மீளஅமுல்படுத்துவதற்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்படக்கூடியன.

இதன் தொடக்கமாக, இந்தக் *கோட்பாடுகளை* உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்ப்பது மட்டுமன்றி அதனை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அதிகாரிகள், அரசு சாரா செயற்பாட்டாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்குப் பரவலாக வினியோகிப்பது அவசியம். இது போன்றே இந்தக் கோட்பாடுகள் ஆதாரமாய் கொண்டுள்ள சர்வதேச சட்ட நியமங்களைக் குறித்து நிற்கும் *விளக்கக் குறிப்புகளையும்* இவ்வாறே பரவலடையச் செய்ய வேண்டும். அது போலவே, இந்தக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறை வடிவங்களைக் கொண்டுள்ள, *வழிகாட்டற் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான கைநூலையும்* பரவலடையச் செய்ய வேண்டும்.[2]

*வழிகாட்டற் கோட்பாடுகளிலுள்ள* பயிற்சி முறைகளும், அவை சார்ந்துள்ள சர்வதேச மனிதநேயச் சட்டங்களினதும், தனிமனிதச் சட்டங்களினதும் நியமங்களும் உ.நா.இ.ன் உரிமைகள் தொடர்பாகவும், அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் பொறுப்புடமைகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெறுமதி வாய்ந்தவை என்பதை நிரூபித்துள்ளன.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய மட்ட செயலமர்வு நடாத்துவது இந்த *வழிகாட்டற் கோட்பாடுகள்* பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இன்னொரு பயனுள்ள வழிமுறையாகும். இத்தகைய செயலமர்வுகள், உள்ளூர், பிராந்திய, மற்றும் தேசிய மட்ட அரசாங்க அதிகாரிகளையும் உள்ளூர் அ.சா.நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுடன் குறிப்பாக உ.நா.இ. சமூகப் பிரதி நிதிகளையும் ஒன்றிணைத்து கோட்பாடுகள் தொடர்பில் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதாயும், இப்பிரச்சினையை அணுகுவதற்கான கூட்டு தந்திரோபாயத்தை ஊக்கப்படுத்தவதாயும் அமைய வேண்டும்.

இதற்கு மேலாகக் *கோட்பாடுகள்*, வெவ்வேறு நாடுகளிலும் உள்ள நிலமைகளைக் கண்காணிப்பதற்கு வேண்டிய முக்கிய சட்டகமாகவும் பணியாற்றுகிறது. அத்துடன், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களைக் கையாளுவதற்கான தேசிய சட்டங்களையும், கொள்கைகளையும் உருவாக்குவதற்கு வேண்டிய வழிகாட்டல்களையும் இது வழங்குகின்றது. உண்மையில், ஐ.நா. பிரகடனங்களும் அரசாங்கங்கள் *வழிகாட்டற் கோட்பாடுகளைப்*[3] பின்பற்றி தம்முடைய உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவியையும், பாதுகாப்பையும் வழங்கக்கூடியதான தேசிய சட்டங்களை உருவாக்குவதற்கு ஊக்கம் வழங்குகின்றது. ஒட்டுமொத்தத்தில், *வழிகாட்டற் கோட்பாடுகளானவை*, உள்நாட்டு இடப்பெயர்வுக்குத் தேசிய மற்றும் சர்வதேச விளைவு காட்டலுக்கான ஒரு நியம சட்டகம் ஒன்றை வழங்குகின்றன.

# தேசிய விளைவுகாட்டலின்
## அடிப்படை குணாம்சங்கள்

தேசிய விளைவு காட்டல் என்பதற்கான வரைவிலக்கணம், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான அனைத்து நிலைமைகளையும், உ.நா.இ. இன் வகைகளையும் உள்ளடக்க வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய பொறுப்புடமையானது, வெவ்வேறான விடயங்களையும் கருத்தில் கொண்டதாக உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- ***அனைத்து காரணிகளும்:*** உள்நாட்டு இடப்பெயர்வுக்கான தேசிய பொறுப்புடமையானது, முரண்பாடு, சமூகக் கலவரம், தீவிரமான மனித உரிமை மீறல்கள், இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள், அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் பொருத்தமானது. வேறொரு வார்த்தையில் கூறுவதானால், உள்நாட்டு இடப்பெயர்வுப் பிரச்சினையை அணுகும் முறைகள், வழிகாட்டற் கோட்பாட்டில் காணப்படும் உ.நா.இ யாவர் என்ற வரைவிலக்கணத்தில் அடங்கும் அனைத்து உ.நா.இ க்கும் அனுகூலங்கள் வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும். இதில் உ.நா.இ. யாவர் என்று பின்வருமாறு விளக்கப்படுகிறது.

  > *...குறிப்பாக ஆயுத முரண்பாடு காரணமாக அல்லது அதன் பாதகமான சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, பொது வன்முறை, மனித உரிமை மீறல்கள், இயற்கை அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் போன்றவற்றின் காரணமாக, தம்முடைய வீடுகள், பரம்பரை வாழிடங்கள் ஆகியவற்றலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற நிர்ப்பந்திக்கப்படும், அல்லது பலவந்தமாக வெளியேற்றப்படுகின்ற ஆனால், தம்முடைய நாட்டு சர்வதேச எல்லைகளை விட்டு வெளியேறாத மக்கள் இவர்கள்.*

  இடப்பெயர்வுக்கான காரணத்தைப் பொறுத்தவரையில், உ.நா.இ.தேவைகள் வேறுபட்டாலும், அனைத்து உ.நா.இ.ரும் தம்முடைய அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பையும், உதவியையும் பெறுவதற்கான உரித்துடையவர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே தேசிய பொறுப்புடமை என்பது, உ.நா.இ. இடப்பெயர்வுக்கான காரணம் எதுவானாலும் எவ்வித பாரபட்சங்களுமின்றி உதவியும் பராமரிப்பும் பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவது ஆகும்.

- ***அனைத்து குழுக்களும்:*** இடம்பெயர்ந்த மக்களில் பெண்களினதும் சிறுவர்களினதும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு தேவைப்படும் பாதுகாப்பு, உதவி மற்றும் குடும்பத்தினருடன் மீளிணைவதற்கான ஒத்தாசை என்பன எப்பொழுதும் புறக்கணிக்கப்படுகின்றனவாய் அல்லது, முன்னுரிமையுடன் நோக்கப்படாதனவாய் உள்ளன. இதை விட மேலாக பெண்களும் சிறுவர்களும் குறிப்பாக யுவதிகள் உதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும், தம்முடைய சொந்தப் பெயரில் ஆவணங்களை வைத்திருப்பதிலும், கல்வி, வருமானம் ஈட்டும் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலும் தம்முடைய தேவைகள் பற்றி குரல் எழுப்புவதிலும் பாரபட்சங்களை எதிர் நோக்குகின்றனர். உ.நா.இ. சமூகத்தின் மத்தியில், பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள், தனித்துவாழும்

இளம் பராயத்தவர், வலுக்குறைந்தோர் மற்றும் முதியவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு தேசிய அதிகாரத்தை சாரும். உள்நாட்டு இடப்பெயர்வு , சிறுபான்மை இனத்தவரையும், சுதேசிய மக்களையும், வறிய கிராமத்தவரையும் அதிகம் பாதிக்கின்றது. இடம்பெயர்ந்ததும், ஏற்கனவேயே ஓரங்கட்டப்பட்ட இந்தக் குழுவினர், இனம்,சாதி, அல்லது கருத்தியல் பாகுபாடுகளால், பாதுகாப்பையும், உதவியையும் பெற்றுக்கொள்வதில் மேலும் பாரபட்சங்களை எதிர் நோக்குகின்றனர். இது, அவர்களின் நலிவுற்றதன்மையை மேலும் அதிகரிப்பதாய் விளங்கும். மொழித் தடைகளால் அரசாங்க அதிகாரிகளுடன் தமது கருத்துக்களை பரிமாறுவதிலும் தம்முடைய உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதிலும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். மேலும், சுதேசிய மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நிலத்துடன் மிகவும் நெருங்கிய பிணைப்பு கொண்டிருப்பதால், இடப்பெயர்வு என்பது அவர்களைப் பொறுத்தளவில் அதிக பாதிப்பு உண்டுபண்ணுவதாய் விளங்குகின்றது. உள்நாட்டு இடப்பெயர்வுக்கான தேசிய விளைவு காட்டல் என்பது, பாரபட்சமின்மை என்ற கோட்பாட்டினடிப்படையில் வழிநடாத்தப்பட வேண்டும். உண்மையில், தேசிய விளைவு காட்டலானது, அநீதி, சமுதாய வேறுபாடுகள் ஆகியவற்றைத் தேற்றுவித்து சமூகங்களைச் சிதறடித்து உள்நாட்டு இடப்பெயர்வை தூண்டும் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் இடைவெளிகளுக்கு பரிகாரம் செய்யக்கூடியதாக விளங்கவேண்டும்.

- ***அனைத்து தேவைகளும்:*** உள்நாட்டு இடப்பெயர்வுக்கான தேசிய பொறுப்புடமையானது, எல்லா விழுமியங்கள் தொடர்பிலும் இப்பிரச்சினை அணுகப்படவேண்டும் என்பதை வேண்டி நிற்கின்றது. உணவு, சுத்தமான குடிநீர், வதிவிடம், மருத்துவ கவனிப்பு மற்றும் ஏனைய மனிதநேய உதவிகளை உ.நா.இ. பெற்றுக் கொள்வது முக்கியமானது. இருந்த போதிலும், பாதுகாப்பையும் உதவியையும் வழங்கக்கூடிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றிலே தேசிய விளைவுகாட்டலின் வினைத்திறன் தங்கியுள்ளதுடன் அதனை வேண்டியும் நிற்கின்றது. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் வேளையிலும் இது உண்மையாயுள்ளது. நிவாரணப் பொருட்கள் மிகவும் அவசியமான தேவைப்பாடாக இருந்தாலும், தீவிரமான பாதுகாப்புப் பிரச்சினைகளும் இதன்போது எழலாம். இதைவிட பாதுகாப்பின் மூலமாக அரசியல் மற்றும் சமூக உரிமைகளோடு, சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளின் தன்மையும் வெளிப்படுத்தப்படுகின்றது.

- ***அனைத்து கட்டங்களும்:*** இடப்பெயர்வின் அனைத்து கட்டங்களிலும் தேசிய பொறுப்புடமை நீண்டு செல்கின்றது. இதனுள், தன்னிச்யையாக நிகழும் இடப்பெயர்வைத் தடுத்தல், மக்கள் இடம்பெயர்ந்ததும் அவர்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்தல், விருப்பத்தினடிப்படையில் பாதுகாப்பான சூழ்நிலையில் மீளத் திரும்புதல் அல்லது மீள்குடியேற்றம், மீள்ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கு உதவுவதன் மூலம் அவர்களுடைய துயர நிலைக்கு நீண்ட தீர்வு ஒன்றை வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கல் போன்றவை உள்ளடங்குகின்றன. "*உள்நாட்டு இடப்பெயர்வு முடிவுக்கு வந்த பின்னர்*" மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தீர்மானமானது, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் மனிதஉரிமைகள் மதிக்கப்படுவதை உறுதிசெய்யும் குறிக்கோள் வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.[4]

- ***அரசாங்கத்தின் அனைத்து உரிய மட்டங்களும் பிரிவுகளும்:*** உண்மையில் ஒரு தேசியநாடாக இருக்குமானால், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான அரசாங்கத்தின் விளைவு காட்டல் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பிரதிபலிக்க வேண்டும்.

நிச்சயமாக தலைநகரைச் சேர்ந்த அதிகாரிகள் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான அரசாங்கத்தின் விளைவுகாட்டலை வடிவமைப்பதில் காத்திரமான பங்கு வகிக்க வேண்டும். இருந்த போதிலும், பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த சமூகத்துடன் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொள்ளும் அதிகாரிகள், களத்தில் தேசிய பொறுப்புடமை என்பது செயற்திறன் மிக்கதாய் அமுல்படுத்தப்படுகிறது என்பதை உறுதிசெய்வதில் முக்கிய பங்களிப்பு செய்யவேண்டும். இதைவிட மேலாக, தேசிய விளைவு காட்டல் என்பது மனிதநேயம், மனித உரிமைகள், சுகாதாரம், வீடமைப்பு, கல்வி, அபிவிருத்தி மற்றும் அரசியல் உள்ளிட்ட அரசாங்கத்தின் உரிய அனைத்து பிரிவுகளினதும் ஒன்றுசேர்ந்த பங்களிப்பை வேண்டி நிற்கின்றது. உ.நா.இ. இன் பௌதிகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் இராணுவம், மற்றும் காவல் துறை பற்றியும் விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டும்.

- ***அனைத்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களும்:*** உள்நாட்டு ஆயுத முரண்பாடு நிகழும் பிரதேசங்களில் நாட்டின் அனைத்து பகுதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசாங்கத்தால் முடியாதிருக்கலாம். உலகம் முழுவதிலும், மில்லியன் கணக்கான உ.நா.இ. அரசு சாராத செயற்பாட்டாளர்களின் கட்டுப்பாட்டிலும், அரசாங்கத்தின் உதவியோ அல்லது பாதுகாப்போ கிடைக்காத பகுதியிலும் காணப்படுகிறார்கள். தேசிய பொறுப்புடமையின் வினைத்திறன்மிக்க செயற்பாடானது, இந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு உதவிகள் வழங்கல், அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அவற்றை இலகுபடுத்தல் என்பவற்றை வேண்டி நிற்கின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் மனிதநேய அம்சங்களை உள்ளடக்குவதானது அரசு சாரா செயற்பாட்டாளர்களுக்கும் அவர்களின் பொறுப்புடமை பற்றி நினைவூட்டுவதற்கான வாய்ப்பாக இருக்கும். சர்வதேச மனிதநேயச் சட்டங்கள், வழிகாட்டற் கோட்பாடுகள் ஆகியவை கூட உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான பாதுகாப்பையும் உதவியையும் வழங்க வேண்டிய பொறுப்புடையவையாய் உள்ளன. ஆகவே அரசாங்கமானது, அ.சா.நி, தேவாலயக் குழுவினர், நிதியுதவி வழங்கும் நாடுகள் அல்லது ஐ.நா போன்ற அமைப்புக்களின் ஆதரவை ஒன்று திரட்டி உ.நா.இ. க்கு உதவிகள் வழங்குவதைப் பெறுமதியாக எண்ணுகின்றது. அதுமட்டுமன்றி உ.நா.இ. வாழும் சூழ்நிலையின் முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் அரசு சாரா செயற்பாட்டாளர்களின் கட்டுப்பாட்டில் வதியும் உ.நா.இ.க்கு பாதுகாப்பையும் உதவியையும் வழங்குவதற்கும் இது உதவியாக அமையும்.

# தேசிய பொறுப்புடமையின் எல்லைக் கோடுகள்

வழிகாட்டற் கோட்பாட்டில் தரப்பட்டுள்ள சாதாரண சட்டகமும் கொள்கை அடிப்படையிலான சட்டகமும் தேசிய பொறுப்புடமையின் அடிப்படைக் குணாம்சங்களை இனங்கண்டுள்ளன. ஆக்கபூர்வமான படிமுறைகள், உள்நாட்டு இடப்பெயர்வுடன் தொடர்பான பிரச்சினையை அணுகுவதற்கான தேசிய பொறுப்புடமை எவற்றைக் கொண்டிருக்க வேண்டும் எனத் தெளிவுபடுத்துவதற் கான அவசியமும் எழுந்துள்ளது. தேசிய பொறுப்புடமையின் திட்டவட்டமான வரையறைகள் அல்லது எல்லைக் கோடுகள் உண்மையில் இனங்காணப்படக் கூடியன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் தேசிய பொறுப்புடமையை வினைத்திறன் மிக்க முறையில் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் குறிப்பாக 12 பிரதான படிமுறைகளைக் கைக் கொள்ளலாம். விளக்கமான நீண்ட பட்டியலாக இல்லாவிட்டாலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு பாதுகாப்பும், உதவியும் வழங்குவதற்காக அரசாங்கங்கள் பின்பற்றும் பட்சத்தில், முக்கிய பெறுபேறுகளைத் தரக்கூடியதான தேசிய பொறுப்புடமை என்பதை உணர்ந்து கொள்ள வகை செய்யும் பிரதான ஏற்பாடுகளை இந்த எல்லைக் கோடுகள் கொண்டுள்ளன.

## 1 தடுப்பு

முதலாவதும் தலையாயதுமான செயற்பாடு தடுப்பு ஆகும். *வழிகாட்டற் கோட்பாடுகளின்* நிமித்தம் (சரத்து 5-9) மக்களை அவர்கள் வாழும் பிரதேசத்திலிருந்து இடம்பெயரச்செய்யக்கூடிய நிலைப்பாடுகளை தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும், தவிர்க்கமுடியாத இடப்பெயர்வுகளைக் குறைப்பதற்கும், அதன் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கும், சூழ்நிலையின் தேவைப்பாட்டுக்கு மேலாக எந்தவொரு இடப்பெயர்வும் நீடிக்காதிருப்பதை உறுதிசெய்வதற்கும் அரசாங்கம் பொறுப்பு கொண்டுள்ளது.

குறிப்பாக, தன்னிச்சையான இடப்பெயர்விலிருந்து தனிநபர் ஒவ்வொருவரும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வகையில், இடப்பெயர்வைத் தடுக்கும் தந்திரோபாயங்கள் மனித உரிமைகள், சர்வதேச மனிதநேயச் சட்டங்கள் ஆகியவற்றை மதிக்கும் சூழ்நிலை ஒன்று உருவாக்கப்படுவதுடன், அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கு முன்னெச்சரிக்கை வழங்கும் நடைமுறைகள், இடர்காலத்தில் துரித நடவடிக்கை மேற்கொள்ளும் நடைமுறைகள் போன்றவற்றை வகுப்பது அரசாங்கம் ஒன்றுக்கு முக்கியமானது.

மக்களின் இடப்பெயர்வு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்மானங்களும் சட்டபூர்வமானதாகவும், சரத்து 7ல் தெளிவுபடுத்தப்பட்ட உத்தரவாதங்களுடன் இணங்கிப்போவதாகவும், நிபந்தனைகளை பூர்த்திசெய்வதாகவும் காணப்பட வேண்டும். அதிகாரிகள், இடம்பெயர்ந்தவர்களுக்கு முறையான தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எந்தவொரு இடப்பெயர்வும், பாதுகாப்பு, போசாக்கு, ஆரோக்கியம், சுகாதாரம் ஆகியன நிலவுகின்ற, குடும்ப அங்கத்தவர்கள் எவரும் பிரிந்திடாமல் உள்ள சூழலில் இடம்பெறவேண்டும். ஆயுத முரண்பாடுகள் அல்லது

அனர்த்தங்கள் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளில் இடப்பெயர்வு நிகழுமானால், தேசிய அதிகாரிகளினால் கீழ்வரும் படிமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

- இத்தகைய இடப்பெயர்வை அங்கீகரிக்கும் திட்டவட்டமான தீர்மானம் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசு அதிகாரம் ஒன்றினால், மேற்கொள்ளப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- இடம்பெயர்ந்தவர்களுக்கு இடப்பெயர்வுக்கான காரணத்தையும், அதன்போதான நடைமுறைகளையும் அறியத்தருவதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில், நட்டஈடு, இடமாற்றம் போன்றவற்றுக்கான ஏற்பாடுகள் பற்றியும் தெரிவிக்கப்படவேண்டும்.

- இடம்பெயர இருப்பவர்களின் சுதந்திரமான , பகிரங்கமான இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

- இடம்பெயர்ந்தவர்களின் இடமாற்றம் தொடர்பான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் பாதிக்கப்பட்டவர்களையும் குறிப்பாக பெண்களையும் உள்ளடக்குதல்.

- செயற்திறன்மிக்க தீர்வாக பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை உறுதிப்படுத்தல்

அனைத்தையும் உள்ளடக்கியுள்ள கோட்பாடு என்ற அடிப்படையில், இடப்பெயர்வு என்பது பாதிக்கப்பட்டோரின் வாழ்வதற்கான உரிமை, கௌரவம், சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை மீறுவதாக விளங்கக்கூடாது. இதைவிட மேலாக, சுதேசிய மக்கள், சிறுபான்மையினர், விவசாயக் குடிமக்கள், மதபோதகர்கள் மற்றும் தமது நிலத்தில் விசேடமாகத் தங்கியிருக்கும் மக்கள் குழுவினர் போன்றோர் எதிர்கொள்ள நேரிடும் இடப்பெயர்விலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கங்களுக்கு உண்டு.

## 2 பிரச்சினை பற்றிய தேசிய வழிப்புணர்வூட்டல்

உள்நாட்டு இடப்பெயர்வு ஒன்று இடம்பெறும்பொழுது, அரசாங்கம் ஒன்று தன்னுடைய பிரதேசத்தில் பிரச்சினை நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வதும், அதற்கு பொறுப்புடன் தீர்வுகாண்பதும் வினைத்திறன்மிக்க முறையில் தேசிய விளைவு காட்டல் ஒன்றை மேற்கொள்வதற்கான முதலாவது படிமுறையாகும். பொது அறிவித்தல்கள், ஊடகங்களைப் பயன்படுத்தல், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை அணுகுவதற்கான அரசாங்கத்தின் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் ஆகியவை இப்பிரச்சினையை அங்கீகரிக்கும் ஒரு வழிமுறையாகவும், அதனைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் ஒரு வழிமுறையாகவும் காணப்படுகின்றன. அரசாங்கம் *வழிகாட்டற் கோட்பாடுகளை* அங்கீகரித்து அதனைப் பயன்படுத்த முன்வருவதானது, உ.நா.இ. இன் விசேட தேவைகளையும், அத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கடப்பாட்டையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதற்கான முக்கியமான குறிகாட்டியாகும்.

உள்நாட்டு இடப்பெயர்வை புரிந்துகொள்வதற்கு, பிரச்சினை பற்றிய வழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். இவ்விடயம் பற்றி தேசிய இணக்கப்பாட்டை கட்டியெழுப்பல்,

நெருக்கடி நிலையை சுமுகமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளல் போன்றவற்றுக்கு தேசியளவில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இது, இடம்பெயர்ந்தோர் மத்தியில் தேசிய ஒற்றுமையை ஊக்குவித்தலையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். இது அவர்களின் பாதுகாப்புக்கும், அனேக சந்தர்ப்பங்களில் உ.நா.இ.சமூகம் எதிர்நோக்கும் இன, சாதி, மற்றும் கருத்தியல் பாகுபாடுகளை முறியடிப்பதற்கும் முக்கியமாகும். இந்த பாகுபாடுகள், உ.நா.இ. மேலும், ஆபத்துக்குட்படுத்தும், தம்முடைய தேவைகளை வெளிப்படுத்துவதில் அவர்களை தயக்கம் கொள்ளச் செய்யும். அவர்களின் வெளிப்படா தன்மையை மேலும் இறுக்கமாக்கும், அதிகரித்துவரும் தாழ்த்தப்படுதல் காரணமாக அவர்கள் மீளஒருங்கிணைவதைக் கடினமாக்கும்.

தேசிய வழிப்புணர்வுட்டலை மேற்கொள்வதற்கான முயற்சிகள், இராணுவம், பொலிஸ் உள்ளடங்கலாக, உரிய அதிகாரங்கள் அனைத்தையும் எட்டக்கூடியதான கூருணர்வூட்டும் நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். அத்துடன், பொது மக்களையும் எட்டியிருக்க வேண்டும். அப்போதுதான், உள்நாட்டு இடப்பெயர்வுடன் தொடர்பான பிரச்சினையை அணுகுவதற்கான தேசிய பொறுப்புடமையானது, பலராலும் அனுசரிக்கப்படும் கொள்கையாகவும், சமூகத்தின் அனைத்து பிரிவுகளாலும் அமுல் படுத்தப்படுவதாகவும் விளங்குகின்றது. இத்தகைய நடவடிக்கைகள், சிவில் சமூகத்தினதும், இடம்பெயர்ந்த மக்களினதும் கலந்தாலோசனை மூலம் உருவாக்கப்படும்போது மிகவும் வினைத்திறன் மிக்கதாய் விளங்கும். உண்மையில், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பொதுத் தகவல் நடவடிக்கைகளின் முக்கிய அங்கம் , உ.நா.இ.க்கு உதவிகள் வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் சிவில் சமூகக் குழுக்கள், உள்ளூர் அ.சா.நி.கள் ஆகியவற்றின் மனிதநேய உதவிகளை பொதுமக்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்துவதாகும். அத்துடன், தம்முடைய உயிருக்கு ஆபத்து நிகழக்கூடிய நிலைமைகளில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கும் இவர்கள் சர்பில், பரிந்துரைத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதும் ஆகும்.

## 3 தரவு சேகரிப்பு

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் உரிமைகளைப பாதுகாப்பதற்குமாக செயற்திறன்மிக்க கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வடிவமைப்பதற்கும் அவர்களின் எண்ணிக்கை, அமைவிடம், நிலைப்பாடு ஆகியவை பற்றிய நம்பகமான தகவல்கள் அவசியமாகும்.

தரவுகள் வயது, பால்நிலை, மற்றும் ஏனைய முக்கிய குறிகாட்டிகளினடிப்படையில் பிரிவுபடுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான், உ.நா.இ. இல் அடங்கும் பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள், அனாதரவான சிறியோர், வயதுவந்தோர், வலுவிழந்தோர், சிறுபான்மை இனத்தவர் மற்றும் சுதேசிய மக்கள் போன்ற விசேட குழுக்களைச் சேர்ந்தவர்களின் தேவைகளுக்கு போதுமான அளவில் தீர்வு காணப்படும். இது அனைத்து உ.நா.இ. வகைகளையும் உள்ளடக்க வேண்டும். அவர்கள் முகாம்களிலிருந்தாலும், உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தாலும் அல்லது வேறெந்த குடியிருப்புகளில் வாழ்ந்தாலும் இவர்கள் அனைவரையும் உள்ளடக்கவேண்டிய அவசியம் உண்டு. அத்துடன் ஆயுத முரண்பாட்டினால், வன்முறையினால், மனித உரிமை மீறலினால் மற்றும் இயற்கை அனர்த்தங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் வேறுபல காரணங்கள் போன்றவற்றினால்

இடம்பெயர்ந்தோர் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். இதைவிட மேலாக, உ.நா.இ.ன் அவசரகால நிலைமைகள் பற்றி மட்டுமல்லாது, இடப்பெயர்வு காரணமாக உ.நா.இ.தேவைகள் காலத்துக்கு காலம் மாறுவதால் நீண்டுசெல்லும் பிரச்சினைகள் பற்றிய தகவல்களும் உடனுக்குடன் இற்றைப்படுத்தப்பட்டு அறியத்தரப்படவேண்டும். கிளர்ச்சிக்குழுக்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் வதியும் உ.நா.இ. மக்களின் விபரங்களை உள்ளடக்கிய தகவல்களை சேகரிப்பதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

உ.நா.இ. பற்றிய தகவல்களை சேகரிப்பதில் ஈடுபடுத்தப்படும் முயற்சிகள், எந்தஒரு விதத்திலும் அவர்களின் பாதுகாப்புக்கோ அல்லது சுதந்திரமான நடமாட்டத்துக்கோ குந்தகம் விளைவிக்கக் கூடாது. குறிப்பாக, தம்மைப் பற்றி அறியத்தருவதில் அச்சம் கொண்டிருக்கும், அல்லது அவ்வாறு செய்வதற்கு குறைவான ஊக்குவிப்பைப் பெறும், அல்லது ஒழுங்கான ஆவணங்கள் எதனையும் கொண்டிருக்காத இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை தொடர்பாக கூருணர்வு கொண்டிருப்பது அவசியமானது. தகவல் சேகரிப்பானது, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் முன்னிற்க வேண்டும். உள்ளூர் அ.சா.நி.கள், மற்றும் ஆராய்ச்சியாளர்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அ.சா.நி.கள் போன்றவை இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதில் அனுபவமும் திறமையும் கொண்டு விளங்குகின்றன. அத்துடன், அரசாங்கத்தின் தரவு சேகரிக்கும் முயற்சிகளை இலகுபடுத்துவதற்காக இவற்றின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒட்டுமொத்தத்தில், ஒருநாட்டின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றிய தரவு சேகரிக்கும் முயற்சிகள், உ.நா.இ. ரை பாதுகாக்கும் உதவி வழங்கும் முயற்சிகளை விரிவுபடுத்தும் நோக்குடன் சரியான புள்ளிவிபரங்களைக் கொண்ட தரவுகளை, தேவைகள், நிலைப்பாடுகள் பற்றிய சரியான விபரங்களை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே தரவு சேகரிக்கும் முயற்சிகளானவை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். தரவு சேகரிப்பு முயற்சிகளில் அல்லது ஏனைய நிர்வாக நடவடிக்கைகளில், (பதிவு செய்யும் செயன்முறை உள்ளடங்கலாக) உ.நா.இ. பங்குபற்றியிருந்தாலும், இல்லாவிட்டாலும் தம்முடைய அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பையும் உதவியையும் அனுபவிக்கும் சட்ட உரித்துகளில் அது எதுவித தாக்கத்தையும் உண்டுபண்ணாது.

## 4 உ.நா.இ. இன் உரிமைகள் தொடர்பான பயிற்சி வழங்கல்.

உ.நா.இ. இன் உரிமைகள் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதன் மூலம், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை பாதுகாப்பது, அவர்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பான அவர்களின் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டக்கூடியதாகவிருக்கும். இது, இந்த பொறுப்புகளை செயற்திறன் மிக்க வகையில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய அரசாங்கத்தின் ஆற்றலையும் பதிலளிக்கும் தன்மையையும் கட்டியெழுப்புவதின் ஒரு அங்கமாகும். குறிப்பாக, பயிற்சி வழங்குதல், கீழ்வரும் பிரிவினரை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்:

- தேசிய மட்டத்திலான அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள்

- இடம்பெயர்ந்தோருடன் நேரடித் தொடர்புகளைப் பேணுகின்ற, களத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு பொறுப்பாக

விளங்கும் பிராந்திய மட்ட மற்றும் உள்ளூர் மட்டத்திலான அரசஅதிகாரிகள்.

- உ.நா.இ. பாதுகாப்பை உறுதிப்படுத்தவதில் முக்கிய பங்கு வகிப்பதாக எதிர்பார்க்கப்படும் இராணுவத்தினரும் பொலிசாரும்.

- உ.நா.இ. முகாம் அதிகாரிகளும், மனிாநேயப்பணிகளுக்கும் மனிதஉரிமைகளின் பாதுகாப்புக்கும் பொறுப்பான உத்தியோகத்தர்களும்.

- தேசிய மனிதஉரிமை நிலையங்களின் ஆணையாளர்களும் ஊழியர்களும்

- சட்டவாக்கத்தின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பாராளுமன்ற அங்கத்தவர்கள்.

- சிவில் சமூகத்திற்கு உ.நா.இ. உரிமைகள் தொடர்பான பயிற்சி வழங்குவதை அரசாங்கங்கள் வரவேற்க வேண்டும். அத்துடன் மிகமுக்கியமாக இதுபற்றி உ.நா.இ. களுக்கும் தம்முடைய உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

பயிற்சியானது, வழிகாட்டற் கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க உ.நா.இ. உரிமைகளையும், அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் பொறுப்புகளையும் உள்ளடக்க வேண்டும். அத்துடன் தடுப்பு முதல் நீண்ட கால தீர்வுகள் வரையான இடப்பெயர்வின் அனைத்து கட்டங்களையும் இது உள்ளடக்கியிருக்க வேண்டும். அரசாங்கங்கள் தம்முடைய சொந்த பயிற்சி முன்னெடுப்புகளில் பயன்படுத்தக் கூடியதான, தற்போது நிலவும் பிரச்சினைகளை உள்ளடக்கும் ஒரு தொகுதி பயிற்சி அலகுகள் கிடைக்கப்பெறுகின்றன. உண்மையில், இந்த பயிற்சி அலகுகள் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் முதன்முதலில், நோர்வேயின் அகதிகள் சபையின் உலகளாவிய உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான செயற்திட்டம் மற்றும் மனிதஉரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றினால் 1999ம் ஆண்டு உருவாக்கப்பட்டவை.[5]

அரசாங்கங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும், உ.நா.இ. தொடர்பான தேசிய பொறுப்புடமையை திறமையாக நிறைவேற்றுவதற்கான வெவ்வேறான கொள்கைத் தெரிவுகளையும் பற்றி விளக்கும் பயிற்சிகள் பெறுமதி வாய்ந்தவை. இதனடிப்படையில், உள்நாட்டு இடப்பெயர்வு எனும் விடய அலகைக் கொண்டு விளங்கும், *கொள்கை வகுப்பாளர்களுக்கும், தொழிற்பாட்டாளர்களுக்குமான புலம்பெயர்வு முகாமைத்துவ அடிப்படைகள்* என்ற கைநூல் ஒன்றை சர்வதேச புலம்பெயர்வு நிறுவனம் தயாரித்திருந்தது. உள்நாட்டு இடப்பெயர்வை அணுகுவதில் உள்ள தேசிய பொறுப்புடமையையும், *வழிகாட்டற் கோட்பாடுகளின்* பொருத்தப்பாட்டையும் முக்கியத்துவப்படுத்திக் காட்டுவதற்கு மேலதிகமாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பாக அரசாங்கம் தன்னுடைய பொறுப்புடமையை பூரணமாக நிறைவேற்றுவதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய படிமுறைகள் பற்றியும் இந்த விடய அலகு தெளிவுபடுத்துகின்றது.[6] இன்னொரு தகவல் தரும் அறிக்கை பொநலவாய அமைப்பினால் வெளியிடப்பட்டது. இது உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களைக் கையாளுவதற்கு பொதுநலவாய அங்கத்துவ நாடுகள் கடைப்பிடிக்கக்கூடிய ஒரு தொகுதி தேசிய ரீதியான “சிறந்த நடைமுறைகளை” வழங்கியுள்ளது.[7] மேலும், அமெரிக்க நாடுகளில் நிகழ்ந்த உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பாக இடம்பெற்ற பிராந்திய செயலமர்வு,

பிராந்தியத்திலுள்ள அரசாங்கங்கள் தேசிய பொறுப்புடமை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் சட்டகம் ஒன்றை அங்கீகரித்துள்ளது.[8]

## 5 உ.நா.இ. உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் சட்டச் சட்டகம்.

ஏனெனில், பாதுகாப்பு என்பது, அடிப்படையில் ஒரு சட்டக் கோட்பாடு ஆகும். உ.நா.இ. உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் தேசிய சட்டச் சட்டகம் ஒன்றை உருவாக்குவதானது, தேசிய பொறுப்புடமையின் முக்கியத்துவம் வாய்ந்த பிரதிபலிப்பாகவும், அதனை முழுமையாக நிறைவேற்றுவதற்கான ஒரு ஊடகமாகவும் விளங்குகின்றது.

உலகின் அனைத்து பிராந்தியங்களிலுமுள்ள நாடுகளில், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான சட்டங்களைப் பின்பற்றுவதானது உ.நா.இ. யாவர் என்பதை விரையறுத்தல், அவர்களின் உரிமைகளை வரையறுத்தல், மற்றும் அவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கு முக்கியமானது என்பதைக் குறிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில், இடப்பெயர்வின் ஒரு குறிப்பிட்ட கட்டம் தொடர்பான உதாரணமாக, குறைந்த பட்ச நியமங்கள் பின்பற்றப்படும் மீளத் திரும்புதல், மீளக்குடியேறுதல் போன்ற கட்டங்கள் தொடர்பான சட்டங்களை மட்டும் அரசாங்கங்கள் பின்பற்றுகின்றன. வேறுசில சந்தர்ப்பங்களில், உள்நாட்டு இடப்பெயர்வின் அனைத்து கட்டங்களையும் உள்ளடக்கும் ஒருங்கிணைந்த சட்டம் ஒன்றை அரசாங்கங்கள் பின்பற்றுகின்றன. இன்னொரு அணுகுமுறை யாதெனில், தற்போதுள்ள தேசிய சட்டவாக்கத்துறையை *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகளுடன்* இணங்கிப் போகக்கூடிய தன்மையைப் பொறுத்து அதனை மீளாய்வு செய்வதும் பகுப்பாய்வு செய்வதும் ஆகும். உள்ளூர் சட்டவாளர்கள் குழுவும் அ.சா.நி. களும், இத்தகைய ஆய்வுகளை *வழிகாட்டற் கோட்பாடுகளுக்கான விளக்கக்குறிப்புகளை* வழிகாட்டியாகக் கொண்டு சில நாடுகளில் நடாத்தியுள்ளதுடன், *கோட்பாடுகளுடன்* சட்டங்கள் ஒத்துப் போகச் செய்யக்கூடியவாறு அரசாங்கங்களுடன் இணைந்து பணிபுரிகின்றன.[9]

எந்தவகையான அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டாலும், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய சட்டவாக்கமானது, *வழிகாட்டற் கோட்பாட்டில்* குறிப்பிடப்பட்டதைப் போன்று சர்வதேச நியமத்தோடு ஒத்துப்போவதாக இருக்கவேண்டும். உண்மையில் உலகமுழுவதிலுமுள்ள அரசாங்கங்கள் ஐ.நா பிரகடனத்தின் பிரகாரம், *வழிகாட்டற் கோட்பாடுகளைப்* பின்பற்றி பலம் வாய்ந்த தேசிய சட்டவாக்க சட்டகங்களை உருவாக்குவதற்கு உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைக் கொண்டு விளங்கும் நாடுகளைத் தூண்டியுள்ளன.[10] இந்த அழைப்பு பிராந்திய மட்டத்திலும் விடப்பட்டுள்ளது. உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக, தேசிய மட்ட சட்டங்களையும், கொள்கைகளையும் சிறந்த முறையில் உருவாக்குவதற்கு *வழிகாட்டற் கோட்பாடுகள்* சிறந்த கருவியாக அமைந்துள்ளன.[11] இந்த முயற்சிகளுக்கு உதவுவதற்காக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியால் , உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய சட்டமூலம் ஒன்றை சட்டத்துறையில் உள்ளடக்குவதற்கு வேண்டிய பிரதான மூலகங்களை இனங்காண்பதற்கும், சட்டவழிகாட்டிகளை வழங்குவதற்கும் ஏதுவாக உள்ளூர் சட்டவாளர்கள் கைநூல் ஒன்று உருவாக்கப்படுகின்றது.

## 6 உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசியக் கொள்கை அல்லது திட்டம்.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றை அல்லது திட்டம் ஒன்றை பின்பற்றுவதானது தேசிய சட்டவாக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடாகவும் உந்துசக்தியாகவும் விளங்குகின்றது. உதாரணமாக, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய கொள்கை அல்லது திட்டமானது, பிரச்சினைகளுக்கு தேசிய மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் விளைவு காட்டவேண்டிய பொறுப்பை எடுத்தியம்ப வேண்டும். அத்துடன், வெவ்வேறுபட்ட அரசாங்க திணைக்களங்களினது பொறுப்புகளையும், பங்களிப்புகளையும் சுட்டிக்காட்டும் அதே வேளை, அவர்கள் மத்தியில் ஒருங்கிணைப்புக்கான நடைமுறை ஒன்றையும் இனங்காணவேண்டும்.

*வழிகாட்டற் கோட்பாடுகளை* ஒரு சட்டகமாகப் பயன்படுத்தும், தேசியக் கொள்கை அல்லது திட்டமானது தடுப்பு நடவடிக்கைகள் முதல், இடப்பெயர்வு ஏற்பட்ட பிற்பாடு பாதுகாப்பு மற்றும் உதவியளித்தல் வரையும், மீளத்திரும்புதல் அல்லது மீளக்குடியமர்தல் அல்லது மீளஒருங்கிணைதல் வரையுமான இடப்பெயர்வின் அனைத்து கட்டங்களையும் உள்ளடக்கியதாக விளங்கவேண்டும். இடப்பெயர்வை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளை தவிர்ப்பதற்கும் இடப்பெயர்வின் பாதக விளைவுகளைத் தணிப்பதற்கும் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பதோடு, தன்னிச்சையான இடப்பெயர்வைத் தடுப்பதற்கு குறிப்பிடத்தக்க அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தேசிய திட்டத்தில் முரண்பாட்டினால் அல்லது மனித உரிமை மீறலினால் மட்டுமன்றி, இயற்கை அனர்த்தம், அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றால் நிகழும் இடப்பெயர்வுக்கான அனைத்து காரணங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இதைவிட மேலாக, உ.நா.இ. உள்ளடங்கும் சில குறிப்பிட்ட குழுவினரான, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், சிறுவர்கள், முதியோர்கள், மற்றும் சுதேசிய மக்கள், சிறுபான்மை இனத்தவர் போன்றோரின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை இத்திட்டங்கள் விரிவுபடுத்தவேண்டும்.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசியக் கொள்கை, உ.நா.இ. சமூகத்தோடு கலந்தாலோசிக்கப்பட்டு தயாரிக்கப்படும்போது, அது மிகவும் பயனுறுதி மிக்கதாய் அமையும். இந்தக் கொள்கை அல்லது நடவடிக்கைத் திட்டம் முழுமையடைந்ததும், அது பரவலாக அனைவர் மத்தியிலும் பரப்பப்படவேண்டும். முக்கியமாக உ.நா.இ. க்கு அவர்களின் சொந்த மொழிகளில், இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்தில் இது பற்றி பூரணமாக அறியத்தரப்பட வேண்டும். உ.நா.இ.க்காக கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்கும்போது, அரசாங்கங்கள் சிவில் சமூகக் குழுக்களுடனும், அ.சா.நி.களுடனும் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுடன் நெருங்கிப் பணியாற்றுவது அவசியமானது. இவர்கள் இடம்பெயர்ந்த சமூகத்துடன் பேணும் தொடர்புகளானவை, உ.நா.இ. அபிலாஷகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அவர்களின் கண்ணோட்டங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் குரல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் குறிக்கின்றன. அத்துடன், அவர்களின் சேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான தந்திரோபாயங்களையும் உத்தேசிக்கின்றன.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய கொள்கைகளையும் செயற் திட்டங்களையும், வகுப்பதற்கு அல்லது பின்பற்றுவதற்கு தயாராயிருப்பதானது, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களையும், அதனைத் தீர்க்கவேண்டிய தன்னுடைய பொறுப்பையும்

அரசாங்கம் இனங்கண்டுள்ளது என்பதற்கான அறிகுறியை வழங்குவதுடன், இந்நடவடிக்கை தேசியளவில் முன்னுரிமை பெற்றது என்பதை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் எடுத்து விளக்குகின்றது. உள்நாட்டு இடப்பெயர்வு இடம்பெற்ற நாடுகளின் அரசாங்கங்களை உ.நா.இ. பாதுகாப்பை உறுதிசெய்யும், அவர்களுக்கு உதவிகள் வழங்கும் தேசிய திட்டங்களை அல்லது முன்னெடுப்புகளை பின்பற்றுமாறு ஐ.நா வின் பிரகடனங்கள் ஊக்குவிக்கின்றன.[12]

## 7 உ.நா.இ.க்கான தேசிய நிறுவன மயப்பட்ட இலக்கு மையம்

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பாக நிறுவனமயப்பட்ட இலக்கு மையம் ஒன்றை உருவாக்குவதானது. பிரச்சினைக்கு தொடர்ச்சியான கவனம் செலுத்தப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கும், அரசாங்கத்திற்கும் உள்ளூர் மற்றும் சர்வதேசப் பங்காளர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பை இலகுபடுத்துவதற்கும் அவசியமாகும்.

பலவாறான வெவ்வெறு நிறுவனமயப்பட்ட தெரிவுகள் உள்ளன. சில நாடுகளில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான பொறுப்புடமையானது அகதிகள் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டுள்ள அரசாங்க கட்டமைப்பு அல்லது சமூகநலன் பேணல் திணைக்களங்கள் போன்ற தற்போதுள்ள அரசாங்க முகவரமைப்பின் அதிகார ஆணையில் சேர்க்கப்பட்டிருக்கும். ஏனைய நாடுகளில், உ.நா.இ. தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதற்கென்றே தனியான அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில நாடுகளில், உ.நா.இ.க்காக அரசாங்கக் குழு, செயற்குழு, அல்லது செயலணி என்பன அமைக்கப்பட்டு உரிய அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஒன்று சேர்ந்து உ.நா.இ. தொடர்பான தேவைகள் பற்றி கலந்துரையாடுவதுடன், சர்வதேச சமூகத்துடனான ஒருங்கிணைப்புக்கு அனுசரணை வழங்கி செயற்திறன்மிக்க விளைவுகாட்டலை உறுதிசெய்யும் தந்திரோபாயங்களையும் வகுக்கின்றனர்.

எந்தவகையான நிறுவனமயப்பட்ட தெரிவு தெரிந்தெடுக்கப்பட்டாலும், உ.நா.இ.க்காக உருவாக்கப்பட்ட தேசிய நிறுவனமயப்பட்ட இலக்கு மையமானது, அவர்களின் பாதுகாப்பையும் உதவியையும் உறுதிப்படுத்தும் ஒரு அதிகார ஆணையைக் கொண்டிருப்பது அவசியம். அதனுடைய ஊழியர்கள் உள்நாட்டு இடப்பெயர்வு பற்றி குறிப்பாக *வழிகாட்டற் கோட்பாடுகள்* பற்றி பயிற்றுவிக்கப்பட வேண்டும். அத்துடன், உ.நா.இ. மதிக்கப்பட்டு அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்கின்ற தேசிய முன்னெடுப்புகளில் முக்கிய பங்குவகிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது, இடப்பெயர்வுக்கான பல்வேறு நீண்டகால தீர்வுகளை உதாரணமாக, மீளத்திரும்புதல், அல்லது மீளக்குடியமர்தல் போன்ற தெரிவுகளை உ.நா.இ. கொண்டிருப்பதையும், பாதுகாப்பற்ற அல்லது ஸ்திரமற்ற நிலைமைகள் நிலவும் பிரதேசங்களுக்கு மீளத்திரும்புவதற்கு அல்லது மீளக்குடியமர்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படவில்லை என்பதையும் உறுதிசெய்வதாயும் விளங்க வேண்டும். இந்த செயன்முறை செயற்திறன் மிக்கதாய் விளங்கவேண்டுமானால், இவ்வதிகார ஆணையை நிறைவேற்றுவதற்கு அரசியல் அதிகாரமும் அதேபோன்று போதுமான வளங்களும் தேவைப்படுகின்றது.

அ.சா.நி.கள் மற்றும் ஏனைய சிவில் சமூக அமைப்புகள் போன்றவற்றுடன் இணைந்து பணிபுரிவதும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சார்பாகப் பரிந்துரை செய்வதும், உ.நா.இ.க்கான

தேசிய முன்னெடுப்புகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள நிறுவனமயப்பட்ட நடைமுறைக்கு மட்டுமே பயனுடையதாய் விளங்கும். உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச விளைவுகாட்டலானது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுடன் நெருங்கிப்பணியாற்றும் சிவில் சமூகக் குழுக்களுடன் சேர்ந்தியங்கும் போது சிறந்த தகவல்களைக் கொண்டதாகவும், நெறிப்படுத்தப்பட்டதாகவும், விரிவுபடுத்தப்பட்டதாகவும் விளங்கும். இவ்வாறான பங்கேற்பு செயன்முறையானது, கிரயத் திறன் கொண்டவையாக இருப்பது மட்டுமன்றி, வெளிநாட்டிலிருந்து “வல்லுனர்களை” தருவிப்பது செலவு கூடியதாக விளங்குகின்றது. அதைவிட மேலாக, வெளியிலிருந்து வரும் வல்லுனர்கள் குறிப்பிட்ட காலத்தின் பின் வெளியேறும்போது உள்ளூர் ஆற்றல்களை வலுப்படுத்தாமலே சென்று விடுகின்றனர்.

உ.நா.இ. இன் உள்ளூர் ஆற்றல்களையும், அ.சா.நி.களினதும், சிவில் சமூகத்தில் உள்ளடங்கும் ஏனைய குழுக்களினதும் திறன்களை பலப்படுத்தும் நோக்கத்துடனான தேசிய திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கட்டியெழுப்புவது, பெறுமதி வாய்ந்தது என்பதை நிரூபிக்கும்.

## 8 தேசிய மனித உரிமைகள் நிலையத்தின் பங்களிப்பு

தேசிய மனித உரிமைகள் நிலையங்கள் மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும், பாதுகாப்பதிலும் மேற்கொள்ளப்படும் சர்வதேச முயற்சிகளில் முக்கியமான பங்களிப்பு வழங்குகின்றன என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். இவர்கள் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன், ஓய்வு பெற்ற நீதியரசர்கள் அல்லது மரியாதைக்குரிய மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்ற சமூகத்தில் முன்னணியிலிருப்போர் இதற்குத் தலைமை வகிப்பதால் தேசிய சங்கங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க மரியாதையைப் பெற்றிருக்கின்றன. உள்நாட்டு இடப்பெயர்வு நிலவும் நாடுகளில் உ.நா.இ.இன் உரிமைகளைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் தேசிய மனித உரிமை நிலையங்கள் பெறுமதிமிக்க பங்காற்றுகின்றன. இப்பங்களிப்பு, உண்மையில் ஐ.நா பிரகடனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தகைய தீர்மானங்களில் அரசாங்கங்களினால் ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. [13]

குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் அனேக தேசிய நிறுவனங்கள் ஆற்றல் போதாமையாயிருந்தாலும், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க தற்போது ஆரம்பித்துள்ளன.[14] இந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக தேசிய மனித உரிமைகள் நிலையத்தின் ஆசிய பசுபிக் மன்றமானது, உறுப்பினர் நிறுவனங்களுக்கான உதவியைத் திரட்டுவதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை விரிவாக்குவதற்காகவும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான ஆற்றலை மதிப்பீடு செய்வதற்காக செயற்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

உள்நாட்டுப் பிரச்சினையைக் கையாளும் சிறந்த நடைமுறைகள், அரசாங்கங்கள் உள்நாட்டு இடப்பெயர்வை மனித உரிமைகள் நிலையத்தின் அதிகார ஆணைக்குட்பட்ட, மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினையாக ஏற்றுக் கொண்டுள்ளன என்பதைக் கருதுகின்றன. அத்துடன் இந்த நிலையங்கள் இது விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு உதவுவதற்காக அவற்றுக்கு கூடுதல் வளங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தப் படிமுறைகளின் மத்தியில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பேணுவதிலும் தேசிய நிறுவனங்கள் கீழ்வரும் மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

- நாட்டிலுள்ள ஏனைய பிரஜைகளைப் போன்றே உ.நா.இ. ரும் சகலவிதமான உரிமைகளையும் அனுபவிக்கின்றார்கள் என்பதையும், தம்முடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் எவ்விதமான பாரபட்சங்களையும் எதிர்நோக்கவில்லை என்பதையும், தமக்குத் தேவையான பாதுகாப்பையும் உதவியையும் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதையும் உறுதிசெய்தல்.

- உ.நா.இ. இன் மனித உரிமைகள் மீறல் பற்றி விசாரணைகள் நடாத்தி அறிக்கை தயாரிப்பதையும் அதிகாரிகள் அதற்கு செயற்திறன் மிக்க விளைவுகாட்டலை வழங்குகின்றார்கள் என்பதையும் உறுதிசெய்தல்

- இடப்பெயர்வு ஏற்படுவதற்கு முன்னதாக முன்னெச்சரிக்கை நடைமுறை ஒன்றைப் பின்பற்றல். அத்துடன், தன்னிச்சையான இடப்பெயர்விலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அதிகாரிகள் வினைத்திறன் மிக்க ஏற்பாடுகள் மேற்கொள்வதையும், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் அதிகாரிகள் மேற்கொள்ளும் தீர்மானங்கள், வழிகாட்டற்கோட்பாடுகளில் காட்டப்பட்டுள்ள உத்தரவாதங்களுடன் ஒத்துப்போகின்றனவாய் அமுல்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிசெய்தல்.

- உ.நா.இ.இன் உரிமைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல். குறிப்பாக உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய தேசிய சட்டங்களை உருவாக்குவதில், *வழிகாட்டற் கோட்பாடுகளைப்* பின்பற்றி தேசிய சட்டமன்று சபைகளுடன் இணைந்து பணியாற்றல். அத்துடன், அரசாங்க அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து செயற்பட்டு உள்நாட்டு இடப்பெயர்வுடன் தொடர்புடைய நிலைப்பாடுகளை செயற்திறன் மிக்க வகையில் அணுகுதல்.

- அரசாங்கம் தேசிய சட்டமூலத்தை அமுலாக்கம் செய்வதையும், சர்வதேச ஒப்பந்தத்திலுள்ள கடப்பாடுகளுடன் இணங்கிப்போவதையும், உ.நா.இ.க்கான தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் அமுலாக்கத்தையும் கண்காணித்து அறிக்கை சமர்ப்பித்தல்.

- விசேடமாக அரசாங்க நிறுவனங்கள், இராணுவம் மற்றும் உ.நா.இ.இன் உரிமைகள் தொடர்பான சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மிகஅதிகளவில் நலிவுற்ற தன்மையை அனுபவிக்கும் பெண்கள் சிறுவர்கள் மற்றும் ஏனைய குழுவினருக்குத் தேவையான பாதுகாப்பையும் உதவியையும் வழங்குவது தொடர்பான வழிப்புணர்வூட்டும் கல்வி நடவடிக்கைகளையும் பயிற்சித் திட்டங்களையும் நடாத்துவது முக்கியம்.

- உ.நா.இ. சார்பாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பற்றி அவர்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும். அத்துடன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் அவர்களின் பங்களிப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- உ.நா.இ. சங்கங்களுக்கும், உள்ளூர் அ.சா.நி., சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இடையிலான உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம். உ.நா.இ.உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பரிந்துரைத்தல்.

- உ.நா.இ. இன் உடல்ரீதியான பாதுகாப்பு ஆபத்துக்குட்பட்டிருக்கும் பிரதேசங்களில், கண்காணிப்பு நடைமுறை ஒன்றை உருவாக்குதல்

- உ.நா.இ. மீளத்திரும்புவதை அல்லது மீளக்குடியமருவதைக் கண்காணித்தல். அத்துடன், இது அவர்களது விருப்பத்திலும் பாதுகாப்பான சூழ்நிலையிலும் இடம்பெறுகின்றது என்பதை உறுதி செய்தல்

- ஏனைய நாடுகளிலுள்ள தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களோடும், உரிய பிராந்திய அமைப்புகளோடும் வலையமைப்புகளைப் பேணுவதன் மூலம், சிறந்த நடைமுறைகளை உருவாக்குவதற்காக உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தகவல்களையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொள்தல்.

## 9 தீர்மானம் மேற்கொள்தலில் உ.நா.இ. பங்கேற்பு

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தம்முடைய அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பையும் மனிதநேய உதவிகளையும் கோருவதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையவர்கள். உ.நா.இ. எதுவிதமான தண்டனையோ தீங்கோ இல்லாமல் தம்முடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான சூழல் உருவாக்கிக் கொடுக்கப்படவேண்டும்.

அனேகமான சந்தர்ப்பங்களில் உதவிகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பெற்றுக் கொள்ளும் இறுதிக் கட்டத்தில் உ.நா.இ. இருக்கும் போதும், தம்முடைய பிரச்சினைகள் தொடர்பான கொள்கை வகுப்புகளிலும் தீர்மானம் மேற்கொள்தலிலும் எதுவிதமான செல்வாக்கையும் செலுத்த முடியாதவர்களாகவும் அவற்றை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அற்றவர்களாகவும் உள்ளனர். இருந்தபோதிலும், இடம்பெயர்ந்தவர்களுடனான கலந்துரையாடல் என்பது அவர்களுக்கு பாதுகாப்பையும் உதவியையும் வழங்கும் முயற்சிகளின் வினைத்திறனுக்கு அவசியமானவையாகும். உ.நா.இ. தம்முடைய தேவைகள் பற்றியும் அவற்றை தெரியப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றியும் அறிந்திருக்கச் செய்யவேண்டும். இதைவிட மேலாக, உ.நா.இ. தாம் எதிர்நோக்கும் நிலைமைகளை “சமாளித்துப் போகக்கூடிய திறன்” கொண்டவர்களாக விளங்குகின்றனர்.[15] இடம்பெயர்ந்தவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் உ.நா.இ.இன் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் போது வினைத்திறன் கூடியவையாக விளங்கும்.

உள்நாட்டு இடப்பெயர்வுக்கான தேசிய மற்றும் சர்வதேச விளைவுகாட்டலானவை உ.நா.இ. களுடன் கலந்துரையாடுவதன் மூலமாகக் குறிப்பிடத்தக்க விதத்தில் தெரியப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்படும். உண்மையில் உ.நா.இ. இன் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் கொள்கைள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் அவர்களையும் பங்கேற்கச் செய்வதற்கான அனுசரணையை வழங்கவேண்டிய பொறுப்பு அரசாங்கங்கத்தினடையது. இது, உ.நா.இ.

தமது முகாம் நிர்வாகத்தில் காத்திரமிக்க பங்கு வகிக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதாயிருக்கும்.

உ.நா.இ. தொடர்பான கலந்துரையாடல்களிலும், எந்தவகையான சாதாரண தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறைகளிலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண்களின் பங்களிப்பை உறுதிசெய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். குடும்பங்களின் ஆரம்பக் கவனிப்பை வழங்குபவர்கள் என்றரீதியில், தம்முடைய குடும்பங்களினதும் சமூகங்களினதும் நலனையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யவதற்கு எவை தேவை என்பதைத் தீர்மானிப்பதில் இடம்பெயர்ந்த பெண்களுக்கு அதிக தகுதி உள்ளது. குறிப்பாக உணவு சேகரிப்பு, உணவுப் பங்கீடு, முகாம் வசதிகள் மற்றும் ஏனைய குடியிருப்புகளை வடிவமைத்தல், தண்ணீர் மற்றும் விறகு சேகரிப்பு போன்ற இடம்பெயர்ந்த பெண்களினதும் சிறுவர்களினதும் உடலியல் ரீதியான பாதுகாப்பில் தாக்கத்தை உண்டுபண்ணும் செயற்பாடுகளில் பெண்களின் உள்ளீடு பெறப்படவேண்டும்.

இடப்பெயர்வின் அனைத்து கட்டத்திலும் இடம் பெயர்ந்தவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக இடம்பெயர்ந்தவர்களை இடமாற்றுவதற்கான எந்தவொரு தீர்மானமும் இடம்பெயர்ந்தவர்களை குறிப்பாக பெண்களை, புதிய இடம் தொடர்பான தீர்மானம் வகுத்தலிலும், அதன் முகாமைத்துவத்திலும் உள்ளடக்கியிருக்க வேண்டும். மனிதநேய உதவிகளின் வழங்கலில் இந்த வழங்கலின் வினியோகத்திலும் திட்டமிடலிலும் பெண்களின் முழுமையான பங்களிப்பை உறுதிசெய்வதில் விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஏனெனில் தமக்கும் தம்முடைய குடும்பங்களுக்கும் உணவு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் எதிர்நோக்கக்கூடிய பாலியல் ரீதியான துன்புறுத்தல்களிலிருந்தும் முறைகேடுகளிலிருந்தும் பெண்களைப் பாதுகாப்பதற்கு இந்த ஏற்பாடு மிகஅவசியமாகும். இடப்பெயர்வுக்கு நிலைத்து நிற்கும் தீர்வு ஒன்றினை காணவேண்டி ஏற்படும்போது, மீளத்திரும்புவதில் அவர்களின் சுயவிருப்பத்தை பின்பற்றும் உரிமை மதிக்கப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு உ.நா.இ. உடனான கலந்துரையாடல் அவசியம். இதற்கு மேலதிகமாக அவர்களின் மீளத்திரும்புகை, மீள்குடியேற்றம், மற்றும் மீளஒருங்கிணைத்தல் தொடர்பான திட்டமிடல், முகாமைத்துவம் போன்றவற்றில் உ.நா.இ.இன் முழுமையான பங்களிப்பை உறுதி செய்வதற்கு விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். [16]

இதைவிடமேலாக, உ.நா.இ.இன் அபிப்பிராயங்களைத் தொடர்ச்சியாகப் பெற்று வருவதுடன், சமாதான முன்னெடுப்புகளிலும், உள்நாட்டு இடப்பெயர்வை தீர்ப்பதற்கான ஏனைய முயற்சிகளிலும் அவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கு மேலதிகமாக, தேசிய பொறுப்புடமையானது, *வழிகாட்டற் கோட்பாட்டில்* குறிப்பிடப்பட்டுள்ள சரத்து 22 (d) யின் பிரகாரம், உ.நா.இ.இன், அரசியல் பங்கேற்புக்கான உரிமையைப் பாதுகாக்கின்றது. அத்துடன் வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதிலும், தம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கும் அரசியல் மற்றும் பொருளாதார தீர்மானங்களில் தம்முடைய அபிப்பிராயத்தை முன்வைப்பதிலும் இவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர். [17]

## 10 நிலைத்து நிற்கும் தீர்வுகள்

உள்நாட்டு இடப்பெயர்வுக்குரிய தேசிய பொறுப்புடமையானது, தம்முடைய கதிக்கு நீண்டதொரு தீர்வை உ.நா.இ. பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். இதன் அர்த்தம், உ.நா.இ. தம்முடைய உரிமைகளுக்கிணங்க மீளத்திரும்புவதை, அல்லது மீளக்குடியேறுவதை இலகுவாக்கக்குவதற்கு சாத்தியமான ஒவ்வொரு முயற்சிகளையும் மேற்கொள்வதாகும்.

ஒட்டுமொத்தத்தில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது விருப்பத்தின்படி, பாதுகாப்பானதும் கௌரவமானதுமான சூழலில் தம்முடைய பரம்பரை வாழிடங்களுக்கு அல்லது அவர்கள் விரும்பும் பிரதேசங்களுக்கு, அல்லது நாட்டின் ஏனைய பகுதியில் மீளக்குடியேறுவதற்கு அவர்களுக்கு உதவ வேண்டியது அரசாங்கங்களின் கடமையாகும். நிலைத்து நிற்கும் தீர்விலும், இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளின் பாதுகாப்பிலும் ஆபத்தின்மை எனும் விடயம் முக்கிய அங்கம் வகிக்கின்றது. முரண்பாட்டினால் ஏற்படும் இடப்பெயர்வைப் பொறுத்தவரையில், அவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், முரண்பாடு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் அல்லது இடப்பெயர்வுக்குக் காரணமான மூல காரணங்களுக்கான அடிப்படைகள் மாற்றம்பெற வேண்டும். கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். இடப்பெயர்வுக்கான காரணம் எதுவாயிருந்தாலும், மீளத்திரும்பும் அல்லது மீளக்குடியேறும் பிரதேசங்களில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக, சட்ட ஆட்சி முறைமையை மீள நிறுவுதல் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நடைமுறைகள் ஆகியவற்றின் மூலமாக இதனை மேற்கொள்ளலாம்.

தம்முடைய உயிருக்கு, பாதுகாப்புக்கு, சுதந்திரத்துக்கு, ஆரோக்கியத்துக்கு பங்கம் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் மீளத்திரும்புவதற்கு அல்லது மீளக்குடியேறுவதற்கு இவர்கள் எந்த நிலைமையிலும் நிர்ப்பந்திக்கப்படக்கூடாது. சாத்தியமான சந்தர்ப்பங்களில் மீளத்திரும்புதல் அவர்களின் சொந்த விருப்பத்திலும் பாதுாப்பான சூழலிலும் இடம்பெறுகின்றதா என்பதைத் கண்காணிப்பாளர்கள் மீளத்திரும்புவோருடமிருந்து உறுதி செய்துகொள்ளவேண்டும்.

இதைவிட மேலாக, இடப்பெயர்வு காரணமாக உ.நா.இ. தாம் கைவிட்ட சொத்துக்களையும், உடமைகளையும் திரும்பப் பெறுவதற்கு உதவவேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்குள்ளது. அது சாத்தியமாகாத பட்சத்தில், அதற்கு சமமான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். பலவாறான சவால்கள் இங்கு எதிர்நோக்கப்படலாம். அனேக சந்தர்ப்பங்களில் இடம்பெயர்ந்தவர்களில் சிலர் மட்டுமே காணி மற்றும் சொத்துக்களுக்கான உரிமைப்பத்திரங்களைக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலமைகளின்போது தனிநபர் மற்றும் அதிகாரிகள் பேணிய சொத்து ஆவணங்கள் இடப்பெயர்வை ஏற்படுத்திய முரண்பாட்டின் காரணமாக, அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக அழிவுக்குட்பட்டிருக்கலாம். இதற்கு மேலாக, தேசிய சட்டங்களும், சொத்து உரிமை, பரம்பரைச் சொத்து தொடர்பான சம்பிரதாயங்களும், பெண்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டுபவையாக உள்ளன. அதிலும் குறிப்பாக, தமது கணவன்மார் கொல்லப்பட்ட நிலையில், தம்முடைய வீடுகளுக்கும் காணிகளுக்கும் மீளத்திரும்பும் பெண்கள், தமக்கென்றொரு வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி தம்மையும் தமது குடும்பத்தையும் தாங்குவதில் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். அரசாங்க அதிகாரிகள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்வு கூறுவதுடன், அவற்றைத் தீர்ப்பதற்கு சர்வதேச மனித உரிமைகளின் படியான நியமங்களைப் பாரபட்சமற்ற முறையில் பின்பற்றவேண்டும்.

உ.நா.இ. மீளத்திரும்புது அல்லது மீளக்குடியேறுவது இதில் எதை விரும்பித் தெரிவு செய்தாலும், அவர்கள் மீள ஒன்றிணைவதற்கும், தம்முடைய வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கும் உதவவேண்டிய பொறுப்பு அரசாங்க அதிகாரிகளுக்குள்ளது. உண்மையில், உ.நா.இ. தம்முடைய வாழ்வாதாரத்தை மீளநிறுவுவதற்கு உதவும் தந்திரோபாயங்களும், தற்சார்பு வழிமுறைகளும், இடப்பெயர்வு ஏற்பட்ட உடனும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுது தான், இடம்பெயர்ந்தவர்கள் நீண்டகாலம் தங்கியிருக்க வேண்டிய தேவையைக் குறைக்கக்கூடியதாயிருப்பதுடன், மீளத்திரும்புதல் அல்லது மீளக்குடியேறுதல் சாத்தியமாகும்பொழுது, அவர்கள் மீளஒன்றிணைவதற்கு அனுசரணை வழங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். மீளத்திரும்பும்போது, அல்லது மீளக்குடியேறும்போது உ.நா.இ. க்கு விதைகள், கருவிகள், மற்றும் தற்காலிக வதிவிடம் அமைக்கத் தேவையான பிளாஸ்ரிக் கூடாரங்கள் போன்றவை உள்ளடங்கிய உதவிப்பொதி வழங்கப்பட வேண்டும்.

இதற்கு மேலாக, அவர்களின் இடப்பெயர்வு காரணமாக உருவாகும் விசேட தேவைகளும் நலிவுற்ற தன்மைகளும் எவ்வளவு காலம் நீடிக்கின்றதோ அந்தளவு காலப்பகுதிக்கு உ.நா.இக்கு விசேட கவனிப்பும் ஆதரவும் தேவைப்படும். இடம்பெயர்ந்தவர்களின் நிலைப்பாடு, தேவைகள், உரிமைகள் போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படாத பட்சத்தில் இடப்பெயர்வு முடிவுக்கு வந்துள்ளது எனும் முடிவு எழுந்தமானமாக எடுக்கப்படக்கூடாது. உ.நா.இ.க்கு வழங்கப்படும் உதவியின் தன்மையானது, அவசரகால மனிதநேய உதவியிலிருந்து படிப்படியாகத் தன்னிறைவைப் பெற்றுத்தருகின்றதும், இடம்பெயர்ந்தவர்களின் பொருளாதார, சமூக மீளிணைப்புக்கு உதவுகின்றதுமான தந்திரோபாய உதவிகளாக மாற வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள், மீளத்திரும்பும் அல்லது மீளக்குடியேறும் பிரதேசங்களில் பாடசாலைகள், சுகாதார நிலையங்கள், வீதிகள் போன்ற உட்கட்டமைப்புகளை அரசாங்கத்துடன் இணைந்து மீளக்கட்டியெழுப்பும் ஏனைய சமூகங்களுக்கு உதவும் முயற்சிகளுக்கு இணைவாக மேற்கொள்ளப்படவேண்டும். மீளிணக்கம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும், வருமானம் ஈட்டும் மற்றும் நுண்கடன் திட்டங்களில் பெண்களினது சமபங்களிப்பை உறுதிப்படுத்தவதற்காக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

உ.நா.இ., தம்முடைய மீளத்திரும்புதல் மீளக்குடியேறல் தொடர்பில், எந்தவிதமான பாரபட்சங்களையும் எதிர்நோக்கவில்லை என்பதை உறுதிசெய்வதற்கும் சுகாதாரம், கல்வி போன்ற பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையும், வாக்களிப்பது உள்ளடங்கலாக பொது விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் உறுதிசெய்வதற்காக, உரிய படிமுறைகள் எடுக்கப்படவேண்டும்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், உ.நா.இ.க்கு முன்வைக்கப்படும் நிலைத்து நிற்கும் தீர்வானது, அவர்கள் பின்வரும் தெரிவுகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிசெய்யவேண்டும். அதாவது, அவர்கள் பாதுகாப்பான சூழலில் தமது விருப்பத்தின்படி மீளத் திரும்புகிறார்கள் அல்லது மீளக்குடியேறுகிறார்கள் என்பதையும் ,தம்முடைய வாழ்வாதாரத்தை மீளப்பெறுவதுடன் தம்மை மீள நிலைப்படுத்திக்கொண்டு சமூகத்திற்குள் மீளஒன்றிணைகிறார்கள் என்பதையும் இத்தெரிவுகள் உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பில், உ.நா.இ. இன் மீள் திரும்புகை அல்லது மீள் குடியேற்றம் தொடர்பான சிறந்த நடைமுறைகள் சார்ந்த கல்விகள் பெறுமதி வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.[18]

இறுதியில், நிலைத்து நிற்கும் தீர்வை முன்வைக்கும் அரசாங்கத்தின் ஈடுபாடானது,

முரண்பாடுகள் அல்லது வேறேனும் காரணங்களால் நிகழும் தவிர்க்கக்கூடிய இடப்பெயர்வுகளுக்கு வினைத்திறன் மிக்க முறையில் தீர்வு காணும் முயற்சிகளை வேண்டி நிற்கின்றது. இவை உண்மையில், செயற்திறன்மிக்க நிலைத்து நிற்கும் தீர்வுகளாக விளங்குவதற்கு, இந்த இடப்பெயர்வுக்கு அடிப்படைக் காரணமான சமூக, பொருளாதார, அரசியல் பாகுபாடுகளை களையக்கூடிய அணுகுமுறைகளைக் கொண்டிருக்கவேண்டும். இனமுரண்பாடு, அல்லது சமூகக் கலவரம், போன்ற காரணங்களால் இடப்பெயர்வு நிகழும் சந்தர்ப்பங்களில், உண்மை ஆணைக்குழுக்கள் போன்ற கட்டமைப்புகள் மூலம் மீளிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதும்,

தண்டனை வழங்கப்படாத விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதும் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை.

## 11 போதுமான வளங்கள்

உ.நா.இ.க்காக உணவுதவி, உறையுள், மருத்துவ பராமரிப்பு, கல்வி, மீள ஒன்றிணைதலுக்கான உதவி உள்ளடங்கலாக அவசியமான உதவிகளை வழங்குவதன் மூலம், கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், அவர்களின் பௌதிகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், மனித மற்றும் பௌதிக வளங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. இதனால் தேசிய பொறுப்புடமையானது, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் அரசாங்கத்தின் அதிகபட்ச முயற்சியை வேண்டிநிற்கின்றது. சில நாடுகள் உ.நா.இ. நிகழ்ச்சித் திட்டங்களுக்கென தம்முடைய தேசிய வரசு செலவுத் திட்டத்தில் விசேட நிதிஒதுக்கீடுகளை உருவாக்கியுள்ளன. அரசாங்கங்களும் விசேட ‘‘உ.நா.இ. நிதியங்களை’’ உருவாக்க முடியும்.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கும் சுமையை அரசாங்கம் தனித்தே சுமக்க வேண்டும் என்பது இதன் அர்த்தம் அல்ல. உண்மையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் ஆற்றல் போதாமலிருக்கும் பட்சத்தில், சர்வதேச சமூகத்திடம் உதவி கோருவது தவிர்க்கப்பட முடியாதது. அவ்வாறிருந்தும் கூட, எந்தவிதமான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு மூலமாகவும், கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்ட முன்னெடுப்புக்கள் மூலமாகவும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவது தேசிய மட்ட முயற்சிகளுக்கு தேவையான நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமாகின்றது.

## 12 சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களுடனான கூட்டுழைப்பு

அரசாங்கங்கள் தமது நாட்டில் இடம்பெயர்ந்தவர்களினது பாதுகாப்பையும் நலனையும் பேணமுடியாத பட்சத்தில், பொறுப்பு வாய்ந்த இறைமையைக் கடைப்பிடிப்பதற்காக இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பையும், தேவையையும் பூர்த்தி செய்யும் பொருட்டு வெளிநாட்டு உதவிகளைக் கோருவது அல்லது ஏற்றுக்கொள்வதும் சர்வதேச நிறுவனங்களுடனும் பிராந்திய நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுவதும் அவசியமாகும். தேசிய பொறுப்புடமையின் இன்னொரு அறிகுறி யாதெனில், உள்நாட்டில்

இடம்பெயர்ந்தவர்கள் சார்பான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேற்கொள்வது.

உண்மையில் சர்வதேச மனிதநேய நிறுவனங்கள் உ.நக.இ.சமூகத்தினரை அணுகி அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஏதுவாக அவர்களுக்குத் ''துரிதமான தங்குதடையின்றிய தொடர்பு கொள்ளும்'' வழிமுறையை வழங்குவது தேசிய அதிகாரங்களது முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாகும் என்று *வழிகாட்டும் கோட்பாடுகள்* வலியுறுத்துகின்றன. இந்த நிறுவனங்கள் சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம், தம்முடைய சேவைகளை வழங்க முன்வருவதற்கு உரித்துடையன.

இத்தகைய முன்வருதல்கள், வரவேற்கத்தகாத விடயங்கள் அல்ல. இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களின் மீள்குடியேற்றம், மீள்ஒருங்கிணைப்பு தொடர்பான தேவையான உதவிகளை வழங்குவதற்கு அவர்களை அணுகும் உரிமையை சர்வதேச நிறுவனங்கள் கொண்டுள்ளன. [19]

சர்வதேச உதவிகளை ஏற்றுக்கொள்வதானது, உதவிகளை வழங்கும் மனிதநேய ஊழியர்களின் பாதுகாப்பையும், கவனிப்பையும் வழங்குவதற்குத் தேசிய அதிகாரிகள் உரித்துடையவர்கள் என்பதைக் கருதுகின்றது. மனிதநேய உதவிகளை வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் போக்குவரத்து, வழங்கல்கள் போன்றவை மதிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். ஆபத்தான சூழ்நிலைகளில் அகப்பட்டிருக்கும் ஊழியர்களை தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கு, அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துவதுடன், அத்தகைய ஊழியர்கள் மீது தாக்குதல் நடாத்தியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதையும் உறுதிசெய்ய வேண்டும். அரசாங்கங்கள் தம்முடைய இந்த பொறுப்புக்களை நிறைவேற்றமுடியாத சந்தர்ப்பத்தில், சர்வதேச நிறுவனங்களுடன் ஒன்றுசேர்ந்து இதற்கான மாற்று ஏற்பாடுகளை செய்ய முன்வரவேண்டும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியை உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உள்ள நாடுகளுக்கு விஜயம் செய்ய வரவேற்பது, சர்வதேச சமூகத்துடனான தம்முடைய ஒத்தழைப்பை நிரூபிப்பதற்கு இன்னொரு வழியாகும். இத்தகைய விஜயங்கள், உ.நா.இ. இன் நிலமைகள் தொடர்பாக முதலில் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கும் அது பற்றி அரசாங்கங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்வதற்கும் பிரதிநிதிகளுக்கு உதவும். இந்த விஜயங்கள் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை உண்டுபண்ணுவதற்கும், அவர்களுக்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கும் அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையிலான கூட்டுழைப்பை விருத்தி செய்வதற்கும் உதவுவதாயிருக்கும்.

- பங்காளர்களாகவிருக்கும் சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்கள், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய பொறுப்புடமையை மீள அமுல்படுத்துவதற்கும், அதற்கு ஆதரவளிப்பதற்கும் உதவக்கூடியதாயிருப்பதுடன், தேசிய முயற்சிகளுக்கு கீழ்வருவன உள்ளடங்கலாகப் பெறுமதிமிக்க பலவழிகளில் ஆதரவு நல்கின்றன.

- தரவு சேகரிப்பு, பதிவு, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் உருவாக்கம், சொத்துக்களை மீளப்பெறுதல், இழப்பீடு தொடர்பான விடயங்களுக்கு தொழினுட்ப ரீதியான ஒத்துழைப்பு வழங்கல்.

- வழிகாட்டற்கோட்பாடுகள் மற்றும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான ஏனைய விடயங்களில் பயிற்சி வழங்கல்

- உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான நிலைமையை மதிப்பீடு செய்வதற்காக களவிஜயங்கள் மேற்கொள்தலும், பிராந்திய மற்றும் தேசிய விளைவுகாட்டலை விரிவபடுத்துவதற்கான சிபாரிசுகளை விரிவாக்குதலும், சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமை நடைமுறைகளின் அமுலாக்கம் தொடர்பில் அறிக்கைகள் சமாப்பித்தலும்.

- தன்னிச்சையான இடப்பெயர்வு பற்றிய முன்னெச்சரிக்கைகளை அதிகாரிகளுக்கு முன்வைத்தலும், இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு செயற்திறன் மிக்க விளைவு காட்டல்களை வழங்குவதும் தேசிய பாதுகாப்பு விளைவுகாட்டலுக்கு முடியுமான விதத்தில் ஆதரவு வழங்கல்.

- உ.நா.இ. இன் முகாம்கள், அவர்களின் பௌதிக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் அமைந்துள்ளது என்று அறிக்கையிடப்பட்ட பிரதேசங்களில் கண்காணிப்பு நடைமுறை ஒன்றை நிறுவுதலும், இத்தகைய அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களில் பாலியல் வன்முறைகள், மற்றும் துஷ்பிரயோகங்கள், சிறுவர்களை இராணுவத்துக்கு ஆட்சேர்த்தல் போன்ற ஆபத்துக்களுக்கு முக்கிய கவனம் செலுத்துவதன் மூலம், அவற்றிலிருந்து உ.நா.இ. ரை பாதுகாக்கும் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்கல்.

- உ.நா.இ.இன் மீளத் திரும்புகை மற்றும் மீள் குடியிருப்பு போன்றவற்றை கண்காணித்தலும், இயலுமானால், உ.நா.இ. உடனிருந்து, இந் நடைமுறை சுயவிருப்பத்திலும் பாதுகாப்பான நிலமையிலும் இடம்பெறுகின்றது என்பதையும் உறுதி செய்தல்.

- உ.நா.இ. மாதர் சங்கம் உள்ளிட்ட உ.நா.இ. சங்கங்களின் உருவாக்கத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம், உ.நா.இ. தம்முடைய சொந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தம்முடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தாமே முயற்சிகள் மேற்கொள்வதைத் தூண்டுவதாயிருக்கும்.

- அரசாங்கங்கள், அ.சா.நி.கள் மற்றும் உ.நா.இ. மத்தியில் கலந்துரையாடல்கள் இடம்பெற அனுசரணை வழங்கல்.

- அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கு வெளியேயிருக்கும் பிரதேசங்களில் வதியும் உ.நா.இ.க்கு உதவிகள் வழங்குவதும், அரசு சாரா செயற்பாட்டாளர்களது பொறுப்புக்களை மீள அறிமுகஞ்செய்து வைத்தலும், வழிகாட்டற் கோட்பாடு மற்றும் சர்வதேச மனித உரிமைச்சட்டங்களின் கீழ் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிவழங்கி பாதுகாப்பதும் முடியுமான நேரத்தில் அரசாங்கம் அரசு சாரா செயற்பாட்டாளர்கள் ஆகியோரிடையே கலந்துரையாடல்களுக்கு அனுசரணை வழங்கி மனிதநேயத்துறைக்கு ஓரிடத்தைப் பெற்றுக் கொடுப்பதும் அதன் மூலம் முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதும்.

- ❖ உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான தம்முடைய தேசிய பொறுப்புடமையை தொழினுட்ப ஒத்துழைப்புடனும், வளங்களைத் திரட்டல் மற்றும் நிதி நிர்வாகம் போன்றவற்றுக்குத் தேவைப்படும் ஏதேனும் உதவியுடனும் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும் அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்குதலும்.

ஒட்டு மொத்தத்தில், குறிப்பாகத் தேசிய ஆற்றல் போதாமலிருக்கும் நேரங்களில், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்களின் ஒத்துழைப்பை நாடிநிற்பது தேசிய பொறுப்புடமையின் ஒரு வடிவமாகும்.

உண்மையில், பாரிய இடப்பெயர்வு நிலைமைகளை சமாளிப்பதற்கு அரசாங்கம் ஆர்வமாய் முன்வரும்போதும், தன்னுடைய உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பையும் நலனையும் மேம்படுத்தும் தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அவ்வரசாங்கம் உள்ளபோதுதான், அதன் தேசிய ஆற்றலைப் பலப்படுத்துவதற்காக உதவும் சர்வதேச மற்றும் பிராந்திய முயற்சிகள் பலனுள்ளவையாய் விளங்கும். தேசிய மட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் உறுதிப்பாடு குறைவாயிருக்கும்போது, தேசிய பொறுப்புடமைக்கு ஆதரவாய் அமையக்கூடிய சர்வதேச சமூகத்தின் ஈடுபாடும் குறைவாகவே காணப்படும். அவ்வாறு ஈடுபடும்பொழுதும், எவ்வாறாயினும், குறிக்கோளானது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் பதிலீடு ஒன்றைத் தெரிவு செய்வதன்றி அதற்குப்பதிலாக தேசிய முயற்சிகளைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

# முடிவுரை

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான உலகளாவிய நெருக்கடியானது, அதன் சிக்கல்தன்மை, பரந்ததன்மை ஆகியவற்றைப் பொறுத்து சவால் மிக்கதாய் விளங்குகின்றது. சிலவேளைகளில் இதனைத் தீர்க்க முடியாதளவுக்கு பிரச்சினையின் பிரமாண்டம் விளங்கும். இருந்தபோதிலும், ஆரம்பப் பகுதி தெளிவாயுள்ளது: உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை பாதுகாக்கின்றதும் அவர்களுக்கு உதவிகள் வழங்குகின்றதுமான தலையாய பொறுப்பு அவர்களது அரசாங்கத்தையே சாருகின்றது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களது உரிமையும் அவர்கள் தொடர்பான தேசிய மற்றும் ஏனைய அதிகாரிகளின் பொறுப்புக்களும் *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகளில்* தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. இவை உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களை அணுகுவதற்கு உதவுகின்றன.

இருந்த போதிலும் இந்த உரிமைகளும் பொறுப்புக்களும் செயற்திறன்மிக்க முறையில் உணரப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கங்கள் ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கின்றனவா என்பதைத் தெளிவாகக் கூறமுடியாதுள்ளது.

இந்த இடைவெளியை நிரப்பும் முயற்சியில் *தேசிய பொறுப்புடமைக்கான சட்டகம்* அரசாங்கங்கள் பின்பற்றக்கூடிய 12 பிரதான படிமுறைகளை இனங்கண்டுள்ளது. இவை அரசாங்கங்கள் தம்முடைய பொறுப்புக்களை செயற்திறன் மிக்க முறையில் நிறைவேற்ற உதவியாயிருக்கும். தனிப்பட்ட ரீதியில் இந்த ஒவ்வொரு படிமுறைகளும் தேசிய முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு அனுகூலம் வழங்குவதற்கும் உதவியாயிருக்கும். ஒட்டு மொத்தத்தில் இவை, உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முக்கியமான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. அதிலும் குறிப்பாக உலகெங்கணும் தம்முடைய பாதுகாப்புக்கும் தம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தமது அரசாங்கங்களை நம்பியுள்ள பல மில்லியன் கணக்கான உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிர்க்கதியை இல்லாமல் செய்வதற்கும் இவை உதவும்.

# முடிவுக் குறிப்புகள்

1 ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைப் பிரகடனங்கள் 58/177 2004. பந்தி 7. ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் பிரகடனங்கள் 2004/55இ 2004. பந்தி 6

2 வோல்ட்டர் கெலின் *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள்.* குறிப்புகள் நிலைமாற்று சட்ட கொள்கை, இல 32. *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கான கைநூல்*

3 ஐ.நா வின் பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) பிரகடனங்கள் 2004/5 23 யூலை 2004. பந்தி 39 மற்றும் (ECOSOC) பிரகடனங்கள் 2003/5 15யூலை 2005. பந்தி 9

4 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை எப்பொழுது முதல் அவ்வாறு தொடர்ந்தும் கருதக்கூடாது என்பதைக் கோரி ஐக்கிய நாடுகளின் அவசரகால நிவாரண இணைப்பாளரும், மனிதநேய விவகாரங்களுக்கான பதில் செயலாளர் நாயகமும் விடுத்த வேண்டுகோளுக்கு மேலதிகமாக, உ.நா.இ. தொடர்பான பிரச்சினைகளுக்குரிய நிலைத்து நிற்கும் தீர்வுகள், புறூக்கிங்ஸ் நிறுவனத்தின் பேர்ண் செயற்திட்டத்தினதும் ஜோர்ஜ் டவுண் பல்கலைக்கழகத்தின் சர்வதேச புலம்பெயர்வுக்கான ஆய்வு நிறுவனம் மற்றும் நோர்வே அகதிகள் சபை ஆகியவற்றினதும் ஒத்துழைப்பில் உருவாக்கப்பட்டன.

5 பயிற்சிக் குறிப்புகள் www.idpproject.org எனும் இணைய தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

*6* *கொள்கை வகுப்பாளர்களுக்கும் தொழிற்பாட்டாளர்களுக்குமான அவசிய புலம்பெயர் முகாமைத்துவம்.: பயிற்சிக் கைநூல்* (புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம், 2004) இந்தக் கைநூலின் உள்ளடக்கம் எரின் மூனி அவர்களினால் ஆக்கப்பட்டது.

7 மனித உரிமைகள் பிரிவின் பொதுநலவாய செயலகம். *பொதுநலவாய ஒன்றுகூடலில் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான நிபுணர்களின் கலந்துரையாடல். பொதுவான விடயங்களும் சிறந்த நடைமுறை வழிகாட்டல்களும். 19*-21 மே 2003. (யூன் 2004)

8 ஐ.நா வின் *உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான செயலாளர் நாயகத்தின் முன்னாள் பிரதிநிதி பிரான்சிஸ் டென்ங் ஆற்றிய உரை.* 18-20 பெப்ரவரி 2004.

*9* *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள்.* மற்றும் *தென் காககஸ் சட்டங்கள்* பற்றிய றொபேர்ட்டா கொஹென், வோல்ட்டர் கெலின், மற்றும் எரின் மூனி ஆகியோரின் குறிப்புகள். நிலைமாற்று சட்டக் கொள்கை பற்றிய ஆய்வு இல.34

10 (ECOSOC) பிரகடனங்கள் 2004/5 23 யூலை 2004. பந்தி 39

*11* *IGAD உபபிராந்தியத்தில் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான மாநாடு: நிபுணர்கள் ஒன்றுகூடலின் அறிக்கை, காட்டும், சூடான், 30 ஆகஸ்ட் -2 செப்டெம்பர் 2003.* முன்வைக்கப்பட்ட அறிக்கையின் பின்னிணைப்பு E யான *உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான "காட்டும் பிரகடனத்தை"* உதாரணத்திற்குப் பார்வையிடவும். ECOWAS அங்கத்துவ நாடுகளும், வழிகாட்டும் கோட்பாடுகளை சட்டகமாகப் பயன்படுத்தி உள்நாட்டில் இடப்பெயர்வு தொடர்பான தேசிய சட்டங்களை தயாரிக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

12 (ECOSOC) பிரகடனங்கள் 2004/5 23 யூலை 2004. பந்தி 39 பிரகடனங்கள் 2003/5 15, யூலை 2003, பந்தி 9

13 மனிதஉரிமைகள் தொடர்பான ஐ.நா.ஆணைக்குழு பிரகடனம் 2004/55 (20 ஏப்ரல் 2004) பந்திகள் 18, 21 மற்றும் பிரகடனங்கள் 2003/51 (23 ஏப்ரல் 2004) பந்திகள் 18, 21

14 உதாரணத்துக்குப் பார்வையிடவும். *தேசிய மனித உரிமை நிறுவனங்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களும்: இலங்கையை உதாரணமாகக் கொண்டு.* மரியோ கொமெஸ்

*15* *Caught within borders: உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான கொள்கைகளுடன் ஒத்துப் போதல்.* நோர்வே அகதிகள் சபை, 2001

*16* *உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள். கோட்பாடுகள்* 7(3)(d)இ 18(3) மற்றும் 28

17 எரின் மூனி மற்றும் பால்க்கீஸ் ஜரா, *உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமை* OSCE பிராந்தியம் புரூக்கிங்ஸ்- SAIS வேலைத்திட்டம்

18 கொழும்பு, மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான புரூக்கிங்ஸ்- SAIS செயற்திட்டமும் இணைந்து தயாரித்த *மீளத்திரும்பல், மீள்குடியேற்றம்,* ஆகியவற்றுக்கான *தொழிற்பாட்டாளர்களின் கருவித்தொகுதியையும், உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான கள நடைமுறைகள் பற்றிய கைநூலையும்* பார்வையிடவும்.

*19* *வழிகாட்டும் கோட்பாடுகள்:* கொள்கைகள் 25 மற்றும் 29(2)

# பின்னிணைப்பு: உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டற் கோட்பாடுகள்.

## அறிமுகம் -விடயப்பரப்பும் நோக்கமும்.

1. இந்த வழிகாட்டற் கோட்பாடுகள் உலகளாவிய ரீதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அணுகுமுறைகளை வழங்குகின்றன. இவை பலவந்தமாக இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களின் உரிமைகளை இனங்காண்பதுடன், அவர்கள் மீளத்திரும்பும்போது அல்லது மீளக்குடியேறும்போது அவர்களின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் உத்தரவாதம் வழங்குகின்றன.

2. இந்தக் கோட்பாடுகளின் நோக்கம் கருதி, ஆயுதப்போராட்டம் காரணமாக உருவாகும் பாதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அல்லது வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள் போன்றவை நிலவும் சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காக நாட்டின்எல்லைக்குள்ளே இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படும் அல்லது இடம்பெயரும் ஒரு குழுவினர் அல்லது தனிநபர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களாகும்.

3. இந்த கோட்பாடுகள், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும் சர்வதேச மனிதநேயச் சட்டங்களையும் பிரதிபலிப்பதுடன் அவற்றை உள்ளடக்கி நிற்கின்றன. அவை பின்வருவனவற்றுக்கு வழிகாட்டியாக நிற்கின்றன:

    a. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி தன்னுடைய அதிகார ஆணைகளை நிறைவேற்றுவதற்கு
    b. உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான சம்பவங்களை அரசாங்கங்கள் எதிர்கொள்ளும்போது
    c. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுடன் உறவுகளைப் பேணும் ஏனைய பிற அதிகாரிகள், குழுக்கள், மற்றும் நபர்களுக்கு
    d. மற்றும், அரசாங்க நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான விடயங்களை அணுகும்போது

4. இந்த வழிகாட்டற் கோட்பாடுகள் பரவலாக எடுத்துரைக்கப்படுவதுடன் இயன்றவரையில் பிரயோகிக்கப்பட வேண்டும்.

## பிரிவு 1- பொதுவான கோட்பாடுகள்

### கோட்பாடு 1

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டங்களின் பிரகாரம், தம்முடைய நாட்டில் வாழும் பிற மக்கள் அனுபவிக்கும் அதே உரிமையை சமமாகவும் முழுமையாகவும் அனுபவிக்க உரிமை உடையவர்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற காரணத்துக்காக அவர்கள் எந்தவித பாரபட்சத்துக்கும் உட்படுத்தப்படக்கூடாது.

2. இந்தக் கோட்பாடுகள் சர்வதேசச் சட்டத்தின் கீழ், தனிநபர் குற்றத்துக்கெதிராக குறிப்பாக இனப்படுகொலை, மனிதநேயத்துக்கெதிரான குற்றச் செயல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான எதுவித குற்றங்களுக்கெதிராகவும் பேதம் காட்டாதவையாக விளங்குகின்றன.

### கோட்பாடு 2

1. இந்தக் கோட்பாடுகள் அனைத்து அதிகாரிகளாலும், குழுக்களாலும், எந்தச் சட்ட அந்தஸ்து உடைய தனிநபர்களாலும், அவதானிக்கப்படுவதுடன், எந்தவிதமான பாதகமான வேறுபாடுகளுமின்றி பின்பற்றப்படும். இந்தக் கோட்பாடுகளை அவதானிப்பது இதில் சம்பந்தப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரிகளையோ குழுக்களையோ அல்லது நபர்களையோ பாதிக்கமாட்டாது.

2. இந்தக் கோட்பாடுகள், எந்தவொரு சர்வதேச மனித உரிமைச்சட்டங்களினதும் அல்லது சர்வதேச மனிதநேயச் சட்டங்களினதும் ஏற்பாடுகளை வரையறை செய்வனவாகவோ அல்லது திருத்தம் செய்வனவாகவோ அல்லது அதற்குத் தீமை உண்டு பண்ணுவனவாகவோ இருப்பதாகக் கருதப்படக்கூடாது. குறிப்பாக, இந்தக் கோட்பாடுகள், ஏனைய நாடுகளில் அடைக்கலம் கோருவதற்கும் அதை அனுபவிப்பதற்குமான உரிமைக்குப் பங்கம் விளைவிக்காதவையாக உள்ளன.

### கோட்பாடு 3

1. தம்முடைய நீதிநிர்வாகத்துக்குட்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பையும் மனிதநேய உதவியையும் வழங்கவேண்டிய பொறுப்பு தேசிய அதிகாரிகளுக்குண்டு.

2. இந்த அதிகாரிகளிடமிருந்து மனிதநேய உதவியையும், பாதுகாப்பையும் கோருகின்ற உரிமை உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்குண்டு. இத்தகைய கோரிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர்கள் இழிவாக நடாத்தப்படவோ அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படவோ கூடாது.

### கோட்பாடு 4

1. இந்தக் கோட்பாடுகள் இனம், நிறம், பால், மொழி, மதம் அல்லது நம்பிக்கை, அரசியல் மற்றும் வேறு ஏதும் கருத்துகள், தேசிய, இன, அல்லது சமூக மூலங்கள், சட்ட அல்லது சமூக அந்தஸ்துகள், வயது, அங்கவீனம், ஆதனம், பிறப்பு, அல்லது இது போன்ற பாரபட்சங்கள் ஏதுமின்றி பிரயோகிக்கப்பட வேண்டியன.

2. சிறுவர்கள், குறிப்பாகத் துணையற்ற சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், இளம் பிள்ளைகளைக் கொண்டுள்ள தாய்மார்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர், வலுவிழந்தவர்கள், முதியோர்கள் போன்ற உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் சிலருக்கு அவர்கள் நிலைமையைப் பொறுத்தும் அவர்களின் விசேட தேவைகளைக் கருத்தில் கொண்டும் போதிய கவனிப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும்.

## பிரிவு 2. இடப்பெயர்விலிருந்து பாதுகாப்பது தொடர்பான கோட்பாடுகள்

### கோட்பாடு 5

சர்வதேசச் செயற்பாட்டாளர்களும் அனைத்து அதிகாரிகளும் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதநேயச் சட்டங்களின் படியான தம்முடைய கடமைகளையும் கடப்பாடுகளையும் மதிப்பதோடு மட்டுமல்லாது அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம், மக்கள் இடம்பெயரவேண்டிய நிலைமையைத் தவிர்த்தலும் தடுத்தலும்.

### கோட்பாடு 6

1. ஒவ்வொரு மனிதரும், தன்னுடைய வீடு அல்லது பாரம்பரையாக வாழுமிடம் போன்றவற்றை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கும் தன்னிச்சையான இடப்பெயர்விலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை உடையவர்கள்.

2. கீழ்வரும் சூழ்நிலையில் உருவாகும் தன்னிச்சையான இடப்பெயர்வுகள் தவிர்க்கப்படவேண்டும்.

    a) நிறஒதுக்கீடு, இனச்சுத்திகரிப்பு போன்ற கொள்கைகளின் அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் இனத்துவ, மதத்துவ, பிரிவு சார் கட்டமைப்பு விகிதாசாரங்களின் அடிப்படையில் உருவாகும் இடப்பெயர்வுகள்
    b) இதில் சம்பந்தப்பட்ட பொதுமக்களின் பாதுகாப்பு அல்லது இராணுவ காரணங்கள் மிகவும் முக்கியமாக இல்லாத பட்சத்தில் ஆயுதப்போராட்டம் நிலவும் சூழ்நிலையில் உருவாகும் இடப்பெயர்வுகள்
    c) பொது மக்களின் நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் அல்லது அவர்களை நிர்ப்பந்திக்கும் நியாயமற்ற பாரியளவான அபிவிருத்தித் திட்டங்களினால் உருவாகும் இடப்பெயர்வுகள்
    d) பெரும் அனர்த்தங்கள் நிலவும் பிரதேசங்களில் அவர்களின் பாதுகாப்பும் சுகாதாரமும் ஒரு இடப்பெயர்வை வேண்டிநிற்காத போது உருவாகும் இடப்பெயர்வுகள்.
    e) மற்றும் கூட்டு தண்டனையாக பயன்படுத்தப்படும் இடப்பெயர்வுகள்.

3. சூழ்நிலைத் தேவை மேலும் ஏற்படாத பொழுது இடப்பெயர்வு நீடிக்கப்படக்கூடாது.

### கோட்பாடு 7

1. மக்களை இடம்பெயரக் கோரும் எந்தவொரு தீர்மானத்துக்கும் முன்னதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒட்டுமொத்தமான இடப்பெயர்வை தவிர்க்கக்கூடிய சாத்தியமான மாற்றீடுகள் அனைத்தையும் ஆராய்ந்ததை உறுதிப்படுத்த வேண்டும்.
2. மாற்றீடுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இடப்பெயர்வை குறைக்கக்கூடிய அல்லது அதன் பாதகமான தாக்கங்களைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய இடப்பெயர்வை பொறுப்பேற்கும் அதிகாரிகள் அதிக பட்ச நடைமுறை யதார்த்தத்துக்கு சாத்தியமாகக் கூடியதாக, இடம்பெயர்ந்த மக்களுக்கு

உரிய தங்குமிடம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். இத்தகைய இடப்பெயர்வுகள் பாதுகாப்பான, போசாக்கு நிறைந்த, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் நிறைந்த சுற்றாடலில் குடும்ப அங்கத்தவர்கள் பிரியாதிருக்கும் வண்ணம் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. இடப்பெயர்வானது ஆயுதப் போராட்டம், அனர்த்தங்கள் போன்ற அவசரகால நிலைமைகள் தவிர்ந்த நேரத்தில் இடம்பெறும்போது கீழ்வரும் உத்தரவாதங்கள் இணங்கிப் போகவேண்டும்.

   a. சட்ட அதிகாரம் பெற்ற அரச அதிகாரி, இத்தகைய நடவடிக்கைகள் பிறப்பிக்கப்படுவதற்கு விசேட தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

   b. இடம்பெயர்ந்த மக்களுக்குத் தமது இடப்பெயர்வுக்கான காரணமும் அது தொடர்பான நடைமுறைகளும் பற்றிய முழுமையான தகவல்கள் வழங்கப்படுவதும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் இழப்பீடும் மாற்று வதிவிடங்களும் வழங்கப்படுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

   c. இடம்பெயரவுள்ள மக்கள் இது தொடர்பான தம்முடைய இணக்கத்தை சுதந்திரமாக வெளிப்படுத்த வேண்டும்.

   d. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இடம்பெயர்ந்தவர்களின் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் பெண்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் உள்ளடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

   e. சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள் தேவைப்படும்போது தகுதி வாய்ந்த சட்ட அதிகாரிகளினால் அவை நிறைவேற்றப்படலாம். அத்துடன்,

   f. இத்தகைய தீர்மானங்களை பொருத்தமான சட்ட அதிகாரிகள் மீளாய்வு செய்வது உள்ளடங்கலாக, வினைத்திறன் மிக்க நிவாரணம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மதிக்கப்படவேண்டும்.

### கோட்பாடு 8

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு, கௌரவம், சுதந்திரம், மற்றும் பாதுகாப்பு போன்றவற்றுக்கான உரிமைகளை மீறக்கூடிய விதமாக இடப்பெர்வு அமையப்பெறக்கூடாது.

### கோட்பாடு 9

தம்முடைய பரம்பரை வாழிடங்களுடன் நெருங்கிய உறவைப் பேணுகின்ற, அதில் கூடுதலாக தங்கியிருக்கும் சுதேசிய மக்கள், சிறுபான்மையினர், விவசாயக் குடிமக்கள், மற்றும் ஏனைய குழுவினரை இடப்பெயர்விலிருந்து காக்க வேண்டிய தலையாய கடப்பாடு அரசாங்கங்களுக்குண்டு.

## பிரிவு 3- இடப்பெயர்வின் போதான பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள்

### கோட்பாடு 10

1. ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கான உரிமையக் கொண்டுள்ளான். இது சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றது. தன்னுடைய வாழ்வதற்கான உரிமையை தன்னிச்சையாகப் பறித்துச்செல்ல எவரும் அனுமதிக்கக்கூடாது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக பின்வருவனவற்றிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும்.

   a) இனப்படுகொலை

   b) கொலை

   c) கூண்டோடு படுகொலை செய்தல் அல்லது தன்னிச்சையான படுகொலை

   d) கடத்தல் உள்ளிட்ட பலவந்தமாக ஏற்படுத்தப்பட்ட காணாமல் போதல்கள், தெரியப்படுத்தப்படாத தடுத்து வைத்தல், அச்சுறுத்தல் அல்லது மரணத்தை உண்டு பண்ணும் செயற்பாடுகள்

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அச்சுறுத்தல்கள் மற்றும் தூண்டுதல்கள் போன்றவை தவிர்க்கப்படவேண்டும்.

2. மோதல் சம்பவங்களில் சம்பந்தப்படாத உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், மற்றும் ஏனைய வன்முறைச் சம்பவங்கள் சகல சந்தர்ப்பங்களிலும் தவிர்க்கப்படவேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக கீழ்வருவனவற்றிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும்.

   a) குறிப்பிட்ட பிரதேசத்தில் வதியும் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் அங்கீகரிக்கப்படுவது உள்ளடங்கலாக நேரடியான அல்லது பாரபட்சமற்ற தாக்குதல்களும் வன்முறைகளும்.

   b) யுத்தம் புரிவதன் ஒரு கருவியாக பட்டினியைப் பயன்படுத்தல்

   c) தாக்குதல்களிலிருந்து இராணுவ இலக்குகளைப் பாதுகாப்பதற்காக அல்லது முக்கிய இராணுவ நடவடிக்கைகள் பற்றிய இரகசியங்களைப் பாதுகாப்பதற்காக அவர்களைக் கேடயமாகப் பயன்படுத்தல்.

   d) அவர்களின் குடியிருப்புகள் மற்றும் முகாம்கள் மீதான தாக்குதல்கள்

   e) மற்றும் துருப்பு எதிர்ப்புக் கண்ணிகளைப் பயன்படுத்தல்.

### கோட்பாடு 11

1. ஒவ்வொரு மனிதனும், கௌரவமாக வாழவும், பௌதிக மற்றும் உளவியல், நெறிமுறை கட்டுக்கோப்புடன் வாழவும் உரிமை கொண்டவர்கள்

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அவர்களுடைய சுதந்திரம் வரையறுக்கப்பட்டதோ இல்லையோ கீழ்வருவனவற்றுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

   a) பாலியல் வன்புணர்வு, பாலியல் இம்சை, சித்திரவதை, கொடூரச் செயல்கள், மனிதநேயமற்ற இழிவுபடுத்தும் நடத்தைகள் மற்றும் தனிநபர் கௌரவத்தைப் பாதிக்கும் செயற்பாடுகள் உதாரணமாக பால்நிலை சார்ந்த வன்முறைகள், நிர்ப்பந்தத்தில் நடைபெறும் பாலியல் தொழில் போன்ற ஏதேனும் கண்ணியமற்ற தாக்குதல்கள்

   b) அடிமைப்படுத்தல் அல்லது அடிமைத்தன்மையின் வேறுவடிவத்தைப் பிரயோகித்தல். உதாரணமாக திருமணத்துக்காக பணத்துக்கு பெண்களை விற்பனை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களை கட்டாயத்துக்குள்ளாக்கி வேலைக்கமர்த்தல்

   c) மற்றும், இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பீதியை உருவாக்குவதற்காக வன்முறைச் சம்பவங்களை மேற்கொள்ளல். மேற்கூறப்பட்ட ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்தல் அல்லது மேற்கொள்ளவுள்ளதாக அச்சுறுத்தல் உந்துதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

## கோட்பாடு 12

1. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தனிப்பட்ட சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் அனுபவிக்க உரிமை கொண்டவர்கள். எவரையும் தன்னிச்சையாகக் கைது செய்யவோ அல்லது தடுத்துவைக்கவோ முடியாது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளுக்கு போதிய காத்திரம் வழங்கவேண்டுமானால், அவர்கள் ஒரு முகாமுக்குள் முடக்கிவைக்கப்படவோ அல்லது காவலில் வைக்கப்படவோ கூடாது. தவிர்க்கப்படமுடியாத சந்தர்ப்பங்களில் இத்தகைய ஏற்பாடுகள் அவசியமாகின்றன. சூழ்நிலைத் தேவை தொடராத பட்சத்தில் இவற்றுக்கு அவசியமில்லை.

3. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள், இடப்பெயர்வின் காரணமாக உருவாகும் பாரபட்சமான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புகள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

4. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் பணயக்கைதியாகப் பிடிக்கப்படக்கூடாது.

## கோட்பாடு 13

1. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இடம்பெயர்ந்த சிறுவர்கள் ஆயுத மோதல்களில் ஆட்சேர்க்கப்படவோ, அல்லது பங்குபற்றும்படி கோரப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ முடியாது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தமது இடப்பெயர்வு காரணமாக எந்தவொரு ஆயுதத்தரப்பிலும் அல்லது குழுவிலும் பாரபட்சமான முறையில் ஆட்சேர்க்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குறிப்பாக, ஆட்சேர்ப்புக்கு இணங்கிப்போக வலியுறுத்தும் அல்லது இணங்கிப் போகாமைக்கு தண்டனை வழங்கும் எந்தவொரு கொடூர, மனிதநேயமற்ற, இழிவுபடுத்தும் நடைமுறைகள் சகல சந்தர்ப்பங்களிலும் தவிர்க்கப்பட வேண்டியவை.

### கோட்பாடு 14

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஒவ்வொருவரும் தன்னுடைய இருப்பிடத்தைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரமும், நடமாடுவதற்கான சுதந்திரமும் கொண்டவர்கள்.

2. குறிப்பாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தமது முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாடுவதற்கும் ஏனைய குடியிருப்புக்களுக்கிடையே நடமாடுவதற்கும் சுதந்திரம் கொண்டவர்கள்.

### கோட்பாடு 15

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் கீழ்வரும் உரிமைகளைக் கொண்டவர்கள்.

1. நாட்டின் ஏனைய பாகத்தில் பாதுகாப்பை நாடுவதற்கான உரிமை

2. தம்முடைய நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான உரிமை

3. இன்னொரு நாட்டில் அடைக்கலம் கோருவதற்கான உரிமை

4. மற்றும் தம்முடைய உயிர், பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் / அல்லது சுகாதாரம் போன்றவை ஆபத்துக்குட்பட்டுள்ள பிரதேசங்களுக்கு வலிந்து மீளத்திருப்பி அனுப்பப்படுவதிலிருந்து அல்லது மீளக்குடியேற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு உரிமை கொண்டவர்கள்.

### கோட்பாடு 16

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தம்முடைய காணாமல் போன உறவினர்களின் கதி பற்றியும் அவர்களின் இருப்பு பற்றியும் அறிந்து கொள்வதற்கான உரித்துடையவர்கள்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் காணாமல் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்ட நபர்களின் கதி பற்றியும் இருப்பு பற்றியும் அறியத்தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சி மேற்கொள்ளவேண்டும். அத்துடன், இந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உரிய சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைத்து செயற்படவேண்டும். இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி காணாமற் போனோரின் நெருங்கிய உறவினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

3. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இறந்துபோனவர்களின் எச்சங்களை இனங்கண்டு சேகரிப்பதுடன், அவை சிதைந்துபோகாமலும் அழிவுறாமலும் காத்து அவற்றை நெருங்கிய உறவினர்களுக்கு கையளிப்பதன் மூலம், இறந்தவர்களின் எச்சங்களை மரியாதையாக அகற்றுவதற்கு வழிசெய்யவேண்டும்.

4. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் கல்லறைகள் அனைத்து சந்தர்ப்பத்திலும் பாதுகாக்கப்பட்டு மதிக்கப்படவேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தம்முடைய இறந்த உறவினர்களின் கல்லறைகளுக்கு விஜயம் செய்ய உரித்துடையவர்கள்.

## கோட்பாடு 17

1. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்ப வாழ்க்கைக்கு மதிப்பு வழங்குவதற்கு உரிமை கொண்டவர்கள்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களினது உரிமையை வலுப்படுத்துவதற்காக ஒன்றுசேர்ந்து இருக்க விரும்பும் குடும்பத்தவர்களுக்கு அதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

3. இடப்பெயர்வு காரணமாக பிரிந்துள்ள குடும்பங்கள் இயன்றவரையில் விரைவாக ஒன்றுசேர்க்கப்பட வேண்டும். இத்தகைய குடும்பங்களை குறிப்பாக, சிறுவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களை மீள ஒன்றுசேர்ப்பதற்கு பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பொறுப்புள்ள அதிகாரிகள் குடும்ப அங்கத்தவர்களின் விசாரணைகளுக்குப் பதிலளித்து அனுசரணை வழங்குவதோடு குடும்பங்களை ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் மனிதநேய அமைப்புக்களுக்கு ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் வழங்கவேண்டும்.

4. முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதால் அல்லது முடக்கி வைக்கப்பட்டிருப்பதால், தம்முடைய தனிப்பட்ட சுதந்திரத்தை இழந்து நிற்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து வாழ உரிமை கொண்டவர்கள்.

## கோட்பாடு 18

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் போதுமான வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பதற்கு உரித்துடையவர்கள்.

2. சூழ்நிலை எதுவாயிருந்தாலும்,, பாரபட்சம் எதுவுமின்றி, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு குறைந்த பட்சம் கீழ்வருவனவற்றையாவது பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு இவற்றைக் கிடைக்கச் செய்வதற்கும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

   a) அத்தியாவசிய உணவும் குடிக்கக்கூடிய நீரும்

   b) அடிப்படை வதிவிட மற்றும் வீடமைப்பு வசதிகள்

c) தேவையான உடுதுணிகள் மற்றும்,

d) அத்தியாவசிய வைத்திய, சுகாதார வசதிகள்.

3. இந்த அடிப்படை வழங்கல்களைத் திட்டமிடுவதிலும் வினியோகிப்பதிலும் பெண்களின் முழுப்பங்களிப்பை உறுதிசெய்வதற்கு விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## கோட்பாடு 19

1. காயப்பட்ட, நோய்வாய்ப்பட்ட மற்றும் ஆற்றல் குறைந்த அனைத்து உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களும் மருத்துவ காரணங்கள் அல்லாத வேறு காரணங்களை முன்வைத்து பாரபட்சம் காட்டப்படாமல், தாம் கோரும் மருத்துவ பராமரிப்பையும் கவனிப்பையும் இயன்றவரையில் வேண்டிய நேரத்தில் குறைந்த பட்ச தாமதத்தில் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கொண்டவர்கள். தேவைப்படும் நேரத்தில் உளவியல் மற்றும் சமூக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது.

2. மகளிர் சுகாதார பராமரிப்பு வழங்குனர்களையும், இனப்பெருக்க சுகாதாரம், பாலியல் து஁பிரயோகத்திற்கு உட்பட்டவர்களுக்கான உளஆற்றுப்படுத்தல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு வழியேற்படுத்தல் உள்ளடங்கலாக பெண்களின் சுகாதார தேவைகளுக்கு விசேட கவனிப்பு வழங்குதல்.

3. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் எய்ட்ஸ் உள்ளிட்ட தொடுகை மூலம் பரவும் நோய்கள் தொற்று நோய்கள் போன்றநோய்களின் தடுப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தல்.

## கோட்பாடு 20

1. ஒவ்வொரு மனிதனும் சட்டத்தின் முன் ஒரு நபராக இனங்காணப்படுவதற்கு உரித்துடையவர்கள்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் இந்த உரிமைக்குப் பலம் சேர்ப்பதற்காக அவர்கள் தம்முடைய சட்ட உரிமைகளைப் பிரயோகிப்பதற்கும், அதனை அனுபவிப்பதற்கும் தேவையான ஆவணங்களான கடவுச்சீட்டுக்கள், அடையாள அட்டைகள், பிறப்பு சான்றிதழ்கள், திருமண சான்றிதழ்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், வழங்கவேண்டும். குறிப்பாக இடப்பெயர்வின்போது தொலைந்த ஆவணங்களுக்குப் பதிலாக புதிய ஆவணங்களை வழங்குவதில் நியாயமற்ற நிபந்தனைகளை பின்பற்றாதிருத்தல். உதாரணமாக, இத்தகைய ஆவணங்களைப் பெறவேண்டுமானால், அவர்கள் பாரம்பரையாக வாழ்ந்து வந்த இடங்களுக்கு மீளத்திரும்பிச் செல்லவேண்டும் என்ற விதமான நிபந்தனை விதிக்கப்படக்கூடாது.

3. இத்தகைய அவசியமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்படுவதுடன், தம்முடைய சொந்தப் பெயரில் இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையும் வழங்கப்பட வேண்டும்.

## கோட்பாடு 21

1. எவரிடமிருந்தும் சொத்துக்களோ உடமைகளோ தன்னிச்சையாக பறித்தெடுக்கப்பட முடியாது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் சொத்துக்களும் உடமைகளும் சகல சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்படவேண்டியன. குறிப்பாகக் கீழ்வருவனவற்றிலிருந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

   a) கொள்ளை

   b) நேரடியான அல்லது பாரபட்சமான தாக்குதல்கள் அல்லது வன்முறைச் செயல்கள்.

   c) இராணுவ நடவடிக்கைகளில் அல்லது இலக்குகளில் கவசமாகப் பயன்படுத்தல்.

   d) பழிவாங்கும் அல்லது தண்டனை வழங்கும் கருவியாகப் பயன்படுத்தல் மற்றும்,

   e) கூட்டு தண்டனையின் ஒரு வடிவமாக சேதத்துக்குள்ளாக்கப்படுதல், அல்லது கையேகப்படுத்தல்.

3. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் விட்டுச்சென்ற சொத்துக்களும் உடமைகளும் அழிவிலிருந்தும் பிறரின் தன்னிச்சையான கையேகப்படுத்தல்களிலிருந்தும் சட்டவிரோத பயன்பாட்டிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டியன.

## கோட்பாடு 22

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் வாழ்ந்தாலும் இல்லாவிட்டாலும் தம்முடைய இடப்பெயர்வின் காரணமாக கீழ்வரும் உரிமைகளை அனுபவிப்பதில் பாரபட்சம் காட்டப்படக் கூடாது.

a) சிந்திப்பதற்கு, விவேகத்துடன் இருப்பதற்கு, மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கு, அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை.

b) வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் உரிமை.

c) சுதந்திரமாகக் கலந்துறவாடுவதற்கும், சமூக விடயங்களில் சமமாகப் பங்குகொள்வதற்குமான உரிமை.

d) வாக்களிப்பதற்கும், அரசாங்க மற்றும் பொது விவகாரங்களில் பங்கு கொள்வதற்குமான உரிமையும் இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கான வழிமுறைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமையும்.

e) தாம் புரிந்து கொள்ளும் மொழியில் தொடர்பு கொள்வதற்கான உரிமை.

### கோட்பாடு 23

1. ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி கற்பதற்கான உரிமை உள்ளது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் இந்த உரிமைக்குப் பலம் சேர்ப்பதற்காக, இவர்கள் குறிப்பாக, ஆரம்பக்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரமும் அவசியமும் பெற்ற இடம்பெயர்ந்த சிறுவர்கள் இந்தக் கல்வி வசதியைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உறுதி செய்ய வேண்டும். கல்வியானது அவர்களின் கலாச்சாரத்தை, மொழியை, மதத்தை அடையாளப்படுத்துவதாக விளங்க வேண்டும்.

3. கல்வி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பெண்களுக்கும் யுவதிகளுக்கும் முழுமையான சமமான பங்களிப்பு உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைக்கப் பெறவேண்டும். குறிப்பாகப் பெண்களுக்கும் வளரிளம் பருவத்தினருக்கும் அவர்கள் முகாம்களில் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும், சூழ்நிலைகள் சந்தர்ப்பம் வழங்கும் பட்சத்தில் உடனும் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

## பிரிவு 4 மனித நேய உதவிகள் தொடர்பான கோட்பாடுகள்

### கோட்பாடு 24

1. அனைத்து மனிதநேய உதவிகளும் மனிதநேய கோட்பாடுகளுடன் இணங்கிப்போகக்கூடியவாறு, பாரபட்சம் இல்லாமலும், சமத்துவத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதநேய உதவிகள், அரசியல் மற்றும் இராணுவ காரணங்களுக்காக திசைதிருப்பப்படக்கூடாது.

### கோட்பாடு 25

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அனைத்து மனிதநேயஉதவிகளையும் வழங்குவதற்கான தலையாய பொறுப்பு தேசிய அதிகாரிகளுக்கே உள்ளது.
2. சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும், மற்றும் ஏனைய பொருத்தமான செயற்பாட்டாளர்களும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பாகத் தமது சேவைகளை வழங்குவதற்கு உரிமை கொண்டவர்கள். இத்தகைய முன்வருதல் ஒரு முரணுள்ள நடவடிக்கையாகவோ அரசின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதாகவோ கருதப்படக்கூடாது. இதனை நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் உதவியாகவே பார்க்கவேண்டும். குறிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேண்டிய மனிதநேய உதவிகளை வழங்க முன்வராத நிலையில் இதற்கான இணக்கத்தை, வெளிப்படுத்தாமல் தமது இச்சைப்படி வைத்திருக்க முடியாது.
3. சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும், மனிதநேய உதவிகள் தடையில்லாமல் கிடைக்கப் பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன், இத்தகைய மனிதநேய உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் நபர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை விரைவாகவும் தடைகள் எதுவுமில்லாமலும் அணுகுவதற்கு உதவிசெய்தல் வேண்டும்.

### கோட்பாடு 26

மனிதநேய உதவிகள் வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் போக்குவரத்து மற்றும் அவர்களுக்கான வழங்கல்களின் வினியோகம் போன்றவை மதிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். இவை, தாக்குதல்களின் அல்லது ஏனைய வன்முறைச் சம்பவங்களின் இலக்காகக் கருதப்படக்கூடாது.

### கோட்பாடு 27

1. சர்வதேச மனிதநேய அமைப்புக்களும், ஏனைய உரிய செயற்பாட்டாளர்களும் இணைந்து மனிதநேய உதவிகளை வழங்க முன்வரும்போது, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள், பாதுகாப்பு, தேவைகள் தொடர்பான விடயங்களில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்யும்போது, நிறுவனங்களும் செயற்பாட்டாளர்களும், உரிய சர்வதேச நியமங்களையும், ஒழுக்கக் கோவைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. மேற்கூறப்பட்ட பந்தியானது, இந்த நோக்கத்திற்காக அதிகார ஆணை பெற்ற சர்வதேச நிறுவனங்களின் பாதுகாப்பு பொறுப்புக்கள் தொடர்பான தப்பான கருத்துக்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

## பிரிவு 5 - மீளத்திரும்புதல், மீள் குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு தொடர்பான கோட்பாடுகள்

### கோட்பாடு 28

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள், தமது வீடுகளுக்கு அல்லது பரம்பரையாக வாழ்ந்து வந்த வாழிடங்களுக்கு பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் மீளத்திரும்பி வருவதற்கு அல்லது மீளக்குடியேறுவதற்கு உரிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பது அல்லது அதற்கு வழிசமைப்பது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பிரதான கடமையாகும். இத்தகைய அதிகாரிகள் திரும்பிவந்த, மீளக்குடியேறிய, அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீளிணைப்பை இலகுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீளத்திரும்புதல், மீள் குடியேற்றம், மற்றும் மீளிணைப்பு தொடர்பான திட்டமிடல், முகாமைத்துவ செயற்பாடுகளில் இவர்களின் பங்களிப்பையும் உறுதிப்படுத்தல்.

### கோட்பாடு 29

1. தமது வீடுகளுக்கு அல்லது பரம்பரையாக வாழ்ந்த வாழிடங்களுக்கு திரும்பிவந்த அல்லது நாட்டின் வேறொரு பகுதியில் குடியேறிய உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக அவர்கள் இடமபெயர்ந்தவர்கள் என்ற காரணத்துக்காக எதுவித பாரபட்சமும் காட்டப்படக்கூடாது. இவர்கள் சகல மட்டங்களிலும் பொதுவிவகாரங்களில் சமமாகப் பங்கேற்பதற்கும் பொதுச்சேவைகளை சமமாகப் பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

2. திரும்பிவந்த/மீளக்குடியேறிய உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் இடப்பெயர்வின்போது விட்டுச்சென்ற சொத்துக்களையும் ஆதனங்களையும் அவர்களுக்கு இயன்றவரையில் மீட்டுத்தருவதில் உதவிகள் வழங்கவேண்டியது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பொறுப்பாகும். இத்தகைய சொத்துக்களையும் ஆதனங்களையும் மீட்டுத் தருவது சாத்தியமாகாத பட்சத்தில், இவர்களுக்கு பொருத்தமான நட்டஈட்டை அல்லது வேறுஒரு வகையிலான நியாயமான இழப்பீட்டை வழங்கவேண்டும். அல்லது அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ள உதவி செய்ய வேண்டும்.

### கோட்பாடு 30

சர்வதேச மனிதநேய அமைப்புக்களுக்கும் ஏனைய பொருத்தமான செயற்பாட்டாளர் களுக்கும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீளத்திரும்புதல், மீளக்குடியேற்றம், மற்றும் மீளிணைப்பு விடயங்களில் உதவிகளை வழங்குவதில் தம்முடைய அதிகார ஆணையைப் பிரயோகிப்பதற்காக அவர்களுடன் விரைவாகவும் தடைகளற்ற விதத்திலும் அணுகிப்பணியாற்றுவதை சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளும் இலகுபடுத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியது:


மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (CHA)
இல.86, றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07
இலங்கை

தொலைபேசி/தொலை நகல் : +94-11-4610943/4
நேரடி : +94-11-4616824

மின்னஞ்சல் : *info@cha.lk*
*memservcoord@cha.lk*
இணையதளம் : *www.humanitarian-srilanka.org*